DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal;
Kokulan Baskaran, Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எதிர்க்கும் கதிர் வேகம்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1453 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 9, 2024

# இலங்கை சுதந்திர தின நாளன்று கனடாவில் "கனடிய தமிழர் பேரவை" அலுவலகம் முன்பாக தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம்.

**கைகளில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகளுடன் "சிரிசி" யின் தற்போதைய நிர்வாகக் குழு ஒட்டுமொத்தமாக இராஜினாமாச் செய்ய வேண்டும்" எனவும் ஆர்ப்பரிப்பு – (ஸ்காபுறோவிலிருந்து சத்தியன்)**





இலங்கை சுதந்திரமடைந்த தினமான பெப்ரவரி 4ம் திகதி அன்று கனடாவில் கனடிய தமிழர் பேரவை அலுவலகம் முன்பாக கூடிய நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கனடிய தமிழர் பேரவையானது உலகத் தமிழர் பேரவையோடு இணைந்து இலங்கை அரசுக்கு சமர்ப்பித்துள்ள 'இமாலய பிரகடனத்தை உடனடியாக வாபஸ் வாங்கவேண்டும் என்றும் இதை மறுக்கும் பட்சத்தில் தற்போதைய நிர்வாகக் குழு முழுமையாக தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்து பதவி விலக வேண்டும் என்றும் அங்கு கூடிய நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 22ம் பக்கத்தில்)

# "இமாலயப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் பயணத்தில் உலகத் தமிழர் பேரவையிடமிருந்து நாம் விலகி நிற்க மாட்டோம்"

**கனடிய தமிழ் ஊடகங்களைச் சந்தித்த கனடிய தமிழர் பேரவையின் தலைவி ரவீணா ரட்ணசிங்கம் உறுதிபடத் தெரிவிப்பு** (கனடா மார்க்கம் நகரிலிருந்து சத்தியன்)

"இமாலயப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் பயணத்தில் உலகத் தமிழர் பேரவையிடமிருந்து நாம் விலக நிற்க மாட்டோம். இது ஒரு பரீட்சார்த்த முயற்சியானாலும் அந்த பயணத்தில் கனடிய தமிழர் பேரவை தொடர்ந்து தன்னை இணைத்துக் கொள்ளும். இமாலயப் பிரகடனத்தின் மூலம் இதுவரையில் எமது தமிழ் மக்கள் எதிர்பார்த்தவை நிச்சயம் கிட்டும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு"



இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை 2ம் திகதி கனடாவின் மார்க்கம் நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலின் கருத்தரங்கு மண்டபம் ஒன்றில் கனடிய தமிழ் ஊடகங்களைச் சந்தித்த கனடிய தமிழர் பேரவையின் தலைவி ரவீணா ரட்ணசிங்கம் மேற்கண்டவாறு மிகவும் உறுதிபடத் தெரிவித்தார்.

அன்றை சந்திப்பில் கனடாவிலிருந்து இயங்கிவரும் அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை சந்தித்த போதே திருமதி ரவீணா ரட்ணசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX Community

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE RIGHT TEAM
MORTGAGE AGENT: Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
ACCOUNTING: Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service
Mobile: 416.710.9150

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

உலக செய்திகள் World News

# அமெரிக்காவில் இராஜதந்திர சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜந்திரகுமார் பொன்னம்பலம்



இலங்கையிலிருந்து சென்று அமெரிக்காவில் தற்போது இராஜதந்திர சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் Congressman Wiley Nickel, Congresswoman Deborah Ross, Congressman Jamie Raskin, Congressman Danny K. Davis ஆகியோருடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். இவர்கள் நால்வரும் தமிழர் விவகாரங்களில் அதிக அக்கறை செலுத்தியவர்கள் அமெரிக்கா காங்கிரஸ் பாராளுமன்றத்தில் தமிழர்தேசம் தொடர்பாக 427 தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பு தொடர்பாக எமது தாயகச் செய்தியாளர் சரவணன் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் இன்னும் சில நாட்களில் காத்திரமான செய்திகள் அங்கிருந்து தமிழ் ஊடகங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புண்டு என்று அறிவித்துள்ளார்.

# இந்தியா முதன்முறையாக ஜேவிபி தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பு

இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றமாக கருதப்படும் வகையில், மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) தலைவர் பேச்சுவார்த்தைக்காக புதுடெல்லிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க தலைமையிலான குழுவொன்று இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இது குறித்து சமூக வலைத்தளமான எக்ஸ் இல் பதிவிட்டுள்ள கலாநிதி ஜெய்சங்கர், அநுர குமார திஸநாயக்கவை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைவாதாக கூறியுள்ளார்.

"நமது இருதரப்பு உறவு மற்றும் அதன் மேலும் ஆழமான பரஸ்பர நன்மைகள் பற்றிய ஒரு நல்லதொரு உரையாடல் இடம்பெற்றது. இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் முன்னோக்கி செல்லும் பாதைகள் குறித்தும் பேசினோம்".


எனினும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக கொண்டு வரப்பட்ட இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தத்தில் கூறப்பட்டமைக்கு அமைய, தமிழர்களுடன் அதிகாரப் பகிர்வு பற்றி ஜே.வி.பி பிரதிநிதிகளுடன் இந்திய தரப்பு விவாதித்தார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அந்த திருத்தத்தை ஜே.வி.பி ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவருவதோடு, அதை "இந்திய விரிவாக்கம்" எனவும் விமர்சித்தது.

இந்தியா ஆதரவு திருத்தத்தை மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்து எதிர்த்து வருகிறது, குறிப்பாக கடந்த 2023 பெப்ரவரியில், அதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துடன் தமது கட்சி எப்போதும் உடன்படவில்லை எனக் கூறினார்.

ஐந்து நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதிகள் இதன் போது அரசியல் மற்றும் வர்த்தகத்துறையின் தலைவர்களை சந்திக்கவுள்ளனர்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தியா தமது கட்சியை அழைத்துள்ளமையானது நல்லதொரு இராஜதந்திர நகர்வு என மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கை பிரச்சாரக் குழுவின் உறுப்பினர் சாந்த ஜெயரத்ன தெரிவித்துள்ளதாக உள்ளூர் இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

"இதற்கு முன்னர் எப்போதும் இல்லாத வகையிலான இந்த நடவடிக்கை இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், தேசிய மக்கள் சக்தியின் வளர்ந்து வரும் சர்வதேச செல்வாக்கு மற்றும் கேந்திர ரீதியான பார்வையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, குறிப்பாக இரண்டு பொருளாதார சக்தி நாடுகளான சீனா மற்றும் இந்தியா இடையேயான உறவுகளுக்கும் இடையே எப்படி சமப்படுத்திச் செல்கிறோம் என்பதையும் இது காட்டுகிறது."



இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல்களுக்கு முன்னதாக, ஒரு முக்கியமான நேரத்தில் அநுரவின் இந்திய வருகை அமைந்துள்ளது.

"இந்த விஜயம் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது மாத்திரமல்லாமல், இலங்கையின் அரசியல் நிலப்பரப்பிற்கு தெளிவான சமிக்ஞையையும் அனுப்புகிறது, இது தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தேசிய மக்கள் சக்தியை ஒரு முக்கியமான சக்தியாக இந்தியா அங்கீகரிக்கிறது".

போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலக வழிவகுத்த அரகலய போராட்டத்திற்கு பின்னர், அநுர குமார திஸநாயக்க பிரபலமடைந்து வருவது அதிகரித்துள்ள நிலையில், தேசிய மக்கள் சக்தியை இந்தியா அழைத்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர போட்டியிடக் கூடும் எனக் கூறப்படும் நிலையில், அவருக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. அவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதான எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைவிட முன்னணியில் உள்ளதாக அந்த கருத்துக்கணிப்புகள் எதிர்வு கூறியுள்ளன.

இந்தியா சென்றுள்ள தேசிய மக்கள் சக்தி குழுவினர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தின் தலைநகர் அம்தாவாதிற்கும், இடதுசாரிகள் ஆட்சி செய்யும் தென்னிந்திய மாநிலமான கேரளாவின் தலைநகர் திருவனந்தபுரத்திற்கும் பயணிக்கவுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய பத்திரிகையான "தி இந்து"வுக்கு அநுர குமார அளித்த செவ்வியில் "நமது நெருங்கிய அண்டை நாடான இந்தியா ஒரு முக்கிய அரசியல் மற்றும் பொருளாதார மையமாக மாறியுள்ளது என்பதை நாங்கள் அறிவோம். எனவே, நாம் பொருளாதார மற்றும் அரசியல் முடிவுகளை எடுக்கும்போது, அது இந்தியாவை எப்படி பாதிக்கும் என்பதைப் பற்றி எப்போதும் அக்கறை காட்டுவோம்" எனக் கூறியிருந்தார்

இந்தியாவுக்கான இந்த விஜயத்தில் அநுர குமார திஸநாயக்கவுடன் தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் நிஹால் ஜயசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மற்றும் பொருளாதார நிபுணர் பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோரும் இணைந்துகொண்டுள்ளனர்.

# இந்தியாவில் "நாடுகடந்த தமிழீழ அரசாங்க" மாநாட்டுக்கு தமிழக அரசு விதித்த தடையை சென்னை உயர்நீதிமன்றம் நிராகரித்தது




## சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புக்கமைய பெப்ரவரி 09-02-2024 வெள்ளிக்கிழமை, மாநாட்டை றிப்போட்ரஸ் கில்ட் சேப்பாக்கம், சென்னையில் நடத்த ஏற்பாடு

இதன்பின்னர் நாடுகடந்த அரசாங்கப் பிரதமருடன் தமிழ நாட்டின் நாடுகடந்த தமிழீழ அரசாங்க்தின் அரசவை உறுப்பினர்கள், ஏனைய அரசவை உறுப்பினர்கள் கலந்தாலோசித்து இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவதென முடி வெடுக்கப்பட்டு நாடுகடந்த அரசாங்கத்தின் தமிழக அரசவை உறுப்பினர் மதிப்புக்குரிய பாவேந்தன் வழக்கறிஞர் அவர்களால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

 மூ மேற்படி வழக்கில் அரசுதரப்பு வழக்கறிஞ்ரின் அனைத்து வாதங்களையும் நீதிபதி நிராகரித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மாநாட்டை நடாத்த அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புக்கமைய பெப்ரவரி 09-02-2024 வெள்ளிக்கிழமை மேற்படி மாநாட்டை - சிற்பாக றிப்போட்ரஸ் கில்ட் சேப்பாக்கம், என்னும் விலாசத்தில் உள்ள மண்டபத்தில் சென்னையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை தமிழர்களின் நீதிக்கான போராடத்தின் ஓர் வெற்றிகரமான நகர்வு என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாடு நடைபெறும் இடம்: றிப்போட்டர்ஸ் கில்ட், சேப்பாக்கம், சென்னை.

மூ காலம்: பெப்ரவரி 09,2024, (09-02-2024). வெள்ளிக்கிழமை.

மூ மாலை 4 மணி.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பற்றி

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் (நா.க.த.அ) என்பது, ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, உலகெங்கிலும் பல நாடுகளில் வாழும் இலங்கைத் தீவைச் சோந்த பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களுக்கான அரசாங்கமாகும்.

2009ஆம் ஆண்டு இலங்கை அரசால் பெருமளவில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நா.க.த.அ. உருவாக்கப்பட்டது. 135 அரசவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக உலகெங்கிலும் வாழும் தமிழர்களிடையே, சர்வதேச கண்காணிப்பாளர்களின் மேற்பார்வையில் நா.க.த.அ, மூன்று தடவை தேர்தல்களை நடாத்தியுள்ளது.

இதன் அரசவையானது, மேலவை (செனற் சபை), பிரதிநிதிகள் அவை என இரண்டு அவைகளையும் மற்றும் அமைச்சரவை ஒன்றையும் கொண்டுள்ளது.

தேசியம், தாயகம் மற்றும் சுயநிர்ணயம் ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, அமைதியான ஜனநாயக மற்றும் இராஜதந்திர வழிகளில் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் பரப்புரையை நா.க.த.அ முன்னெடுத்துள்ளது. மேலும், அதன் அரசியல் நோக்கங்களை, அமைதியான வழிகளில் மட்டுமே அடைய வேண்டும் எனவும் அதன் அரசியலமைப்பு வலியுறுத்துகிறது.

தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை புரிந்த குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் கோருவதுடன், தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க பொது சன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் நா.க.த.அ. வலியுறுத்துகிறது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்க பிரதமர் திரு.விசுவநாதன் உருத்ரகுமாரன், நியூயோர்க்கைத் தளமாக்க் கொண்ட ஒரு வழக்கறிஞர் ஆவார்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# மீண்டும் ஒரு தடவை எழுந்து நின்று ‘கர்ச்சித்த’ எமது ‘நீதித்துறை சிங்கம்’ இளஞ்செழியன் அவர்கள்

இலங்கையின் நீதித்துறையில் சில தமிழ் பேசும் ‘சிங்கங்கள்’ தங்கள் பெயரைப் பதித்துச் சென்றுள்ளார்கள் என்பது பலபேருக்குத் தெரியாது. குறிப்பாக எமது விடுதலைப் போராட்ட வரலாற்றோடு அக்கறையும் விசுவாசத்தையும் மனதில் கொண்டு பயணிப்பவர்களுக்கு இந்த விடயங்கள் நன்கு புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும்.

மிக அண்மையில் கடந்த வருடத்தின் இறுதியில் கொக்குத் தொடுவாய் புதைகுழிகள் விவகாரத்தில் காவல்துறையையின் தவறுகளைக் கண்டித்தும் இனவாதப் போக்கு கொண்ட சிங்கள் அரசியல்வாதிகளை நிராகரித்தும் தன் பணியை துணிச்சலாகச் செய்து தொடர்ந்து அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக இலங்கையை விட்டு நீங்கிச் சென்ற மதிப்பிற்குரிய நீதிபதி சரவணராஜா அவர்களைப் போன்றும் தொன்னூறுகளில் யாழ்ப்பாண நீதி மன்றத்தில் தான் நீதிபதியாகக் கடமையாற்றி போது. கோட்டையிலிருந்து அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் செய்து அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்துக் கொண்டிருந்த “இராணுவக் கொடியவர்களை கோட்டைக்குள் சென்று கைது செய்து கொண்டு வாருங்கள்” என்று உத்தரவுகள் பிரபித்த துணிச்சலான நீதித்துறை சார்ந்து பணியாற்றிய நீதிபதி கதிரவேற்பிள்ளை (இவர் நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்), அவர்கள் வழியில் மற்றுமொரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் எமது ‘நீதித்துறை சிங்கம்’ அவர்களும் கடந்த பல வருடங்களாக தொடர்ச்சியாக இவ்வாறான துணிச்சல் மிகுந்த தீர்ப்புக்களையும் உத்தரவுகளையும் வழங்கும் ஒருவராக இருப்பதும் எமது தாயகத் தமிழர்களுக்கும் நீதிக்காக அலைபவர்களுக்கும் காப்பாகவும் விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.

நீதிபதி இளஞ்செழியன் அவர்கள் கடந்த காலங்களில் பல வழக்குகள் தனக்கு முன்னாள் விசாரணைகளுக்கு வருகின்றபோதெல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் குற்றஞ் செய்தவர் ‘எந்தக் கொம்பனாக இருந்தாலும்” அவனுக்கு நீதி என்பது பொதுவானது என்ற கோட்பாடுகளுக்கு ஏற்ப தீர்ப்புக்களை வழங்குவதும், பின்னர் தொடர்ச்சியாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதுமாக தமிழ் மக்களின் உண்மையான பாதுகாவலான தொடர்ந்தும் பிரகாசித்து வருகின்றார் என்பதை எமது வாசகர்களுக்கு எடுத்துரைப்பதே இவ்வாரக் கதிரோட்டத்தின் நோக்கமாக தெரிவு செய்தோம். இவ்வாறாக நீதிபதி இளஞ்செழியன் அவர்களின் தீர்ப்புக்களால் மன அழுத்தங்களுக்கு உள்ளான பல இராணுவக் கொடியவர்கள் தண்டப் பணம் செலுத்திய பின்னர் பணியிலிருந்து விலகியும் சென்றுள்ளனர் என்பதும் அவரது தீர்ப்புக்கு கிட்டிய வெற்றிகளே என்று நாம் கருத வேண்டும்.

இந்த பக்கத்தை எழுதத் தொடங்குவதற்கு முன்னர் எமக்கு வவுனியாவிலிருந்து எமது ஆசிரிய பீடத்திற்கு வந்த செய்தியொன்றில் ‘நீதித்துறை சிங்கம்’ இளஞ்செழியன் அவர்களது தீரமிக்க தீர்ப்பு ஒன்றைக் கண்டு நாம் மெய்சிலிர்த்தோம். அதை எமக்கு அனுப்பி வைத்த மன்னார் செய்தியாளருக்கு எமது நன்றி!

மேற்படி வவுனியா நீதிமன்றச் செய்தியின்படி. 2006 ஆம் ஆண்டு தமிழ் இளைஞனொருவர் காணாமல் போனமைக்கு ஓமந்தை கட்டளைத் தளபதி பொறுப்பாளி எனவும், வன்னி பிராந்திய தளபதி உயர் அதிகாரி என்ற முறையில் அவரும் பொறுப்பாளி எனவும், இலங்கை இராணுவத் தளபதி, இலங்கை இராணுவ கட்டமைப்பின் தளபதி என்ற வகையில் பொறுப்பாளி எனவும் எமது ‘நீதித்துறைசஷ சிங்கம்’வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கடந்த புதன்கிழமையன்று 7ம் திகதி தீர்ப்பளித்துள்ளார்.

நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் ஓமந்தை கட்டளைத் தளபதி குறித்த இளைஞன் காணாமல் போனமைக்கு பொறுப்பாளி எனவும், இதே போன்று இலங்கை இராணுவ கட்டமைப்பின் தளபதி என்ற வகையில் அவரும் பொறுப்பாளி எனவும், தீர்ப்பளித்து 03.06.2024 இற்கு முன் இளைஞனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

அவ்வாறு முன்னிலைப்படுத்த தவறின் 03.12.2024 முதல் 3 தளபதிகளும் ஒன்றாக இளைஞரின் தாயாருக்கு 10 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்..

இவ்வாறான தீரச்செயல்களை நாம் வியந்து பாராட்ட வேண்டும். இதில் தொடர்புடை நீதிபதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அவர்களும் சகல நலன்களும் பெற்று வாழவும் அவர்கள் பணிசெய்யவும் பிரார்த்தனைகள் செய்யவும் வேண்டும். இது எம் அனைவரதும் கடமை என்பதையும் நாம் உணரவேண்டும்!

# வவுனியாவில் மீண்டும் ஒரு தடவை எழுந்து நின்று கர்ச்சித்தார் எமது "நீதித்துறை சிங்கம்"

## இராணுவ தளபதிகளுக்கு நீதிபதி இளஞ்செழியன் பிறப்பித்துள்ள உத்தரவு



2006 ஆம் ஆண்டு தமிழ் இளைஞனொருவர் காணாமல் போனமைக்கு ஓமந்தை கட்டளைத் தளபதி பொறுப்பாளி எனவும், வன்னி பிராந்திய தளபதி உயர் அதிகாரி என்ற முறையில் பொறுப்பாளி எனவும், இலங்கை இராணு-வத் தளபதி, இலங்கை இராணுவ கட்டமைப்பின் தளபதி என்ற வகையில் பொறுப்பாளி எனவும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கடந்த புதன்கிழமையன்று 7ம் திகதி தீர்ப்பளித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசமான ஓமந்தை சோதனைச் சாவடியை வந்தடைந்த கந்தசாமி இளமாறன் என்ற இளைஞன் ஓமந்தை சோதனைச் சாவடியில் இருந்து காணாமல் போயுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் ஓமந்தை இராணுவ கட்டளைத் தளபதி, வன்னி கட்டளைத் தளபதி, கொழும்பு இராணுவ கட்டளைத் தளபதி ஆகிய மூவருக்கும் எதிராக ஆட்கொணர்வு மனு, சிரேஷ்ட சட்டத்தரணி ரட்ணவேல் தாக்கல் செய்யப்பட்டு 18 ஆண்டுகளின் பின்னர் புதன்கிழமை (07) வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஓமந்தை சோதனைச் சாவடி பதிவு புத்தகத்தில், குறிக்கப்பட்ட இளைஞன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து வந்தமை பதிவு செய்யப்பட்டுள்ளது.ஆனால் அந்த இளைஞனை தாங்கள் கைது செய்யவில்லை எனவும், தடுத்து வைக்க வில்லை எனவும், ராணுவ தரப்பில் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

குறிக்கப்பட்ட இளைஞன் கடைசியாக காணப்பட்ட இடம், ஓமந்தை சோதனை சாவடி. அதன் பின் அவர் காணாமல் போயுள்ளார் என மனுதாரர் தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் ஓமந்தை கட்டளைத் தளபதி குறித்த இளைஞன் காணாமல் போனமைக்கு பொறுப்பாளி எனவும், வன்னி பிராந்திய தளபதி உயர் அதிகாரி என்ற முறையில் பொறுப்பாளி எனவும், இலங்கை இராணுவத் தளபதி, இலங்கை இராணுவ கட்டமைப்பின் தளபதி என்ற வகையில் பொறுப்பாளி எனவும், தீர்ப்பளித்து 03.06.2024 இற்கு முன் இளைஞனை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

அவ்வாறு முன்னிலைப்படுத்த தவறின் 03.12.2024 முதல் 3 தளபதிகளும் ஒன்றாக இளைஞரின் தாயாருக்கு 10 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.மேலும் இளைஞன் காணாமல் போனது தொடர்பாக தகுந்த சட்ட நடவடிக்கைக்கு சட்டமா அதிபருக்கு நீதிமன்றத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**Room for Rent**

-Scarborough Town Ctr
jdp miw> 2 bedroom 2 bath
condoy; thliff;F cs;sJ.
Share with Tamil senior male.
TTC at door step. Gym, Swim pools, Tennis, BBQ area, and more. Available January 1st.
Prefer Tamil male.
Contact. 647 273 2053.

# "கண்ணகி நீதி கேட்ட தமிழ் மண்ணிலிருந்து இலங்கைத் தமிழருக்காக நீதி கேட்கிறேன்!"

**2009ல் முள்ளி வாய்க்கால் இனப் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உலக நாடுகளிலேயே இந்தத் தமிழ் நாட்டில் மட்டும் தான் 18 பேர் நெருப்பிலே தங்களை ஆகுதியாக்கிக் கொண்டார்கள். அதை கண்ணீரோடும், கனத்த இதயத்தோடும் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.**




## தமிழ்நாட்டில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் கனடா ஒன்றாரியோ பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி முழக்கம்!

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் நடைபெற்ற "அயலகத் தமிழர் மாநாட்டில் கனடாவின் பிரதிநிதியாக ஒன்றாரியோ பாராளுமன்ற உறுப்பினர் திரு. லோகன் கணபதி கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். இலங்கையில் நடைபெற்ற இனமழிப்புப் படுகொலைகளுக்கு உரிய நீதி கிடைக்க உலகத் தமிழர்கள் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று அவர் அப்பொழுது கேட்டுக் கொண்டார்.

அவர் தன்னுடைய உரையில், "பூமிப்பந்தில் எங்கோ ஒரு மூலையில் பொங்கு தமிழர்க்கு இன்னல் நேர்ந்தால் அவர்கள் திரும்பிப் பார்க்கும் ஒரே திசை தமிழ் நாடு தான். இந்தத் தாய்த் தமிழ் மண்ணில் நடைபெறும் அயலகத் தமிழர் மாநாட்டில் கலந்து கொள்வதில் பெருமை அடைகிறேன். தமிழர்கள் இல்லாத நாடில்லை என்பதை நிருபிப்பது போல உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்து இங்கே வருகை தந்துள்ள சிறந்த ஆளுமைகளைப் பார்த்து நான் பெருமை கொள்கிறேன்.

கீழடியும், கந்தரோடையும் தமிழனின் 2500 ஆண்டு காலப் பழமையை உலகிற்குப் பறை சாற்றி நிற்கின்றன. தாய்த் தமிழகத்தின் தொப்புள் கொடி உறவுகளின் முன்னால் கனடா தேசத்தின் குடிமகனாக, பாராளுமன்ற உறுப்பினராக நின்று கொண்டிருக்கிறேன். ஆனால் பிறப்பால் நான் முள்ளி வாய்க்கால், கந்தரோடைப் பகுதியைச் சேர்ந்தவன். யாழ்ப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தில் அங்கம் வகித்த பொழுதே இனமழிப்புப் படுகொலைகளுக்காக எதிர்க்குரல் எழுப்பியவன் நான். எண்பதுகளில் போரின் பாதிப்புகளுக்கு உள்ளாகிப் புலம் பெயர்ந்து கனடா சென்றவன் நான். இது என்னுடைய கதை மட்டுமல்ல நண்பர்களே! அரை நூற்றாண்டு காலமாக சபிக்கப்பட்ட இலட்சக்கணக்கான அகதிகளின் கதை.

கனடா தேசம் எனக்கு எல்லாவிதமான அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது. அகதிகள் கூட மக்கள் பிரதிநிதியாக, அமைச்சராக, ஆக முடியும் என்ற அதி உன்னத செயப்பாட்டை முன்னெடுத்த உலகின் முதன்மையான ஜனநாயக நாட-ான, நீதியின் முகமாகத் திகழ்கிறது கனடா தேசம். இலங்கையில் நிகழ்ந்த இனமழிப்புப் படுகொலைகளுக்கு தமிழகத்திற்கு அடுத்தபடியாக எதிர்க்குரல் எழுப்பியது கனடா தேசம் தான். அது மட்டுமல்ல. தமிழ் மரபுத் திங்களுக்கு அங்கீகாரம் அளித்து தமிழர்களை பெருமைப்படுத்தியதும் கனடா தேசம் தான். தமிழர்கள் நன்றியை என்றும் மறக்க மாட்டார்கள்.

2009ல் முள்ளி வாய்க்கால் இனப் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உலக நாடுகளிலேயே இந்தத் தமிழ் நாட்டில் மட்டும் தான் 18 பேர் நெருப்பிலே தங்களை ஆகுதியாக்கிக் கொண்டார்கள். அதை கண்ணீரோடும், கனத்த இதயத்தோடும் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

தமிழகம் இன்று அரசியல், பொருளாதாரம், கல்வி, மருத்துவம், போன்ற துறைகளில் கோலோச்சி வருவதோடு, சமூக நீதி மாநிலமாகவும் திகழ்கிறது. அதன் அபரிமிதமான வளர்ச்சி, விரிவாக்கங்களுக்காக எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைத் தமிழர்களின் இனமழிப்புப் படுகொலைக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. நீதிக்காகப் போராடிய கண்ணகி, கண்கள் சிவக்க, மெரீனாவிலே நின்று கொண்டிருக்கிறார். அந்தக் கண்ணகியை தெய்வமாக வழிபடுபவர்கள் நாம். சரிந்தாலும், பீனிக்ஸ் பறவை போல் உயிர்த்தெழும் தமிழினம் நாம். இன அழிப்புக்கான நீதி கிடைத்தால் தான் உலகத் தமிழர்களின் தன்மானமும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும். தமிழனின் ஆளுமை சந்தேகமின்றி நிரூபிக்கப்படும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கேற்ப, உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழர்கள் ஒருங்கிணைந்து இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும்." என்று அவர் கேட்டுக் கொண்டார்.

திரு, லோகன் கணபதியின் எழுச்சி உரை இலங்கை தமிழர்களின் உரிமைக் குரலாக அவையில் ஒலித்தது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

vy;yhtpkhd typfSf;Fk; — All Pain & Aches, Arthritis
M];kh> gPdprk;> xt;thik — Asthma, Sinusitis, Rhinitis Allergies
kdj;jsh;r;rp> jiytyp — Stress, Migraine & All Types of Headaches
ePhpopT Neha;> tapw;Wtyp — Diabetes, Gastric Pain, Ulcer
khjtplja; rk;ke;jkhditAk; — Menstruation
clw;gUkd; Fiwj;jy; — Weight Loss

Kjyhd rfytpjkhd Neha;fSf;Fk;
Mrs. K. Vasanthakumari
Acupuncturist (R.A.C)
njhlh;Gnfhs;sTk;.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

Toronto City Councillor Paul Ainslie Awarded the OPLA James Bain Medallion

கனடிய செய்திகள் Canadian News

# ரொறன்ரோ நகர சபையின் கவுன்சிலர் போல் ஐன்ஸ்லி அவர்கள் ஒன்றாரியோ பொது நூலக சங்கத்தின் ஜேம்ஸ் பெயின் மெடாலியன் விருதினை தட்டிக் கொண்டார்



கடந்த ஜனவரி 28ம் திகதியன்று, ஒன்றாரியோ நூலகச் சங்கத்தின் பொது நூலக விருதுகள் வழங்கும் விழாவில், ரொறன்ரோ மாநகர சபையின் 24ம் வட்டார கில்வூட் கவுன்சிலர் போல் ஐன்ஸ்லி OPLA ஜேம்ஸ் பெயின் மெடாலியன்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் ஆண்டின் சிறந்த பொது நூலக வாரிய உறுப்பினர் விருதும் அவருக்கு வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டார். கவுன்சிலர் ஐன்ஸ்லி கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக பொது நூலகங்களின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து வருபவர் எனவும் ரொறன்ரோ பொது நூலக வாரியம் மற்றும் ஒன்றாரியோ பொது நூலகங்களின் கூட்டமைப்பு (FOPL) ஆகியவற்றில் அங்கம் வகித்து அவற்றின் வளர்ச்சிக்காக பணியாற்றுகிறார். பொது நூலகங்களின் நிர்வாகத்தில் கவுன்சிலர் போல் ஐன்ஸ்லியின் சிறந்த தலைமைத்துவத்தை இந்த விருது பாராட்டுகிறது என அன்றைய தினம் அறிவிக்கப்பட்டது.

கவுன்சிலர் போல் ஐன்ஸ்லியின் நிலையான நிர்வாக பங்களிப்பு ஜனவரி 2024க்கான டொராண்டோ நகர நூலகர் அறிக்கையில் சிறப்பிக்கப்பட்டுள்ளது, "கடந்த 18 ஆண்டுகளில், கவுன்சிலர் பால் ஐன்ஸ்லி, நகர சபையில் TPL இன் சேவைகளில் ஒரு சாம்பியனாக இருந்து, வாரியம் மற்றும் TPL இன் தலைமைக் குழுவிற்கு விலைமதிப்பற்ற வழிகாட்டுதலை வழங்கியுள்ளார். மேலும், கவுன்சிலர் ஐன்ஸ்லி, ஒன்ராறியோவில் உள்ள பொது நூலகங்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கியுள்ளார். கவுன்சிலர் ஐன்ஸ்லி தனது தலைமைத்துவத்தையும் அனுபவத்தையும் ஒருங்கிணைத்து கல்வி, கலாச்சார செழுமை மற்றும் சமூக மேம்பாட்டில் பொது நூலகங்களின் திறனை உணர்ந்து கொள்கிறார்.

பொது நூலகங்கள் அறிவு இடைவெளியைக் குறைப்பதிலும், வாழ்நாள் முழுவதும் கற்றல், சமூக உள்ளடக்கம் மற்றும் பொருளாதார மேம்பாட்டை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொது நூலகங்கள் புத்தகக் களஞ்சியங்களை விட அதிகம் அவை பொருளாதார மற்றும் சமூக சமத்துவம் மற்றும் உள்ளடக்கியமைக்கு ஒரு சான்றாகும்.

ஜேம்ஸ் பெயின் 1901 இல் ஒன்றாரியோ நூலக சங்கத்தின் முதல் தலைவராக இருந்தார், ஒன்ராறியோவில் உள்ள நூலகங்களின் ஆரம்ப வளர்ச்சியை வடிவமைப்பதில் முக்கிய மற்றும் செல்வாக்கு மிக்க பங்கை அவர் ஆற்றினார். ஜேம்ஸ் பெயின் தொடங்கிய பாதையைத் தொடர்ந்து, கவுன்சிலர் ஐன்ஸ்லி, "பொது நூலகங்களை இன்றியமையாததாக மாற்றும் மதிப்புகளுக்காக தொடர்ந்து வாதிடுவதற்கான ஆழ்ந்த பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் இந்த விருதை ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். கவுன்சிலர் ஐன்ஸ்லி இந்த விருதில் உள்ள உறுதியான அர்ப்பணிப்பைப் தொடர்ந்து பேணுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரை வாழ்த்த விரும்புவோர் (416) 392-4008 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.



Associate Minister Vijay Thanigasalam Introducing Ontario's One Fare Travel Program

# ஒன்டாரியோவின் ஒரு கட்டண திட்டத்தை அறிமுகப்படுத்துகிறோம்

ஒன்றாரியோ மாகாணத்தின் ஒரே கட்டணம் பல பயணங்கள் என்னும் திட்டத்தை ஒன்றாரியோ மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சரும் ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான விஜேய் தணிகாசலம் அவர்கள் முன்தினம் அறிவித்துள்ளார். அவர் இந்த அறிவிப்பைச் செய்யும் போது மாகாண முதல்வர் டக்போர்ட் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் அருகில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக விஜேய் தணிகாசலம் அவர்களின் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில். ஒன்றாரியோவின் "ஒரே கட்டணம்-பல பயணங்கள்" என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம், ரொறன்ரோ பெரும்பாகம் மற்றும் பல நகரங்களில் உள்ளவர்கள் பொதுப் போக்குவரத்தை எளிதாகவும் மலிவான கட்டணத்திலும் மேற்கொள்வதை எங்கள் அரசாங்கம் எளிதாக்குகிறது என்பதை அறிவிப்பதற்காக நான் எமது மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்களுடன் ஒன்றாக இணைந்திருந்தேன் என்பதை அறிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

எதிர்வரும் பெப்ரவரி 26 முதல், GO ட்ரான்சிட் உட்பட, TTC மற்றும் ரொறன்ரோ பெரும்பாகத்தில் இயங்கிவரும் பங்கேற்கும் ட்ரான்ஸிட் ஏஜென்சிகளுக்கு இடையே இலவசமாகப் பரிமாற்றம் செய்யும் பயணிகள் ஒருமுறை மட்டுமே கட்டணம் செலுத்துவார்கள் என்பதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

நீங்கள் வேலைக்குச் சென்றாலும், பாடசாலைகளுக்குச் சென்றாலும் அல்லது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரைப் பார்க்கச் சென்றாலும், நாங்கள் ஒரு போக்குவரத்து அமைப்பிலிருந்து மற்றொரு போக்குவரத்து அமைப்பிற்கு மாற்றுவது மிகவும் எளிமையானது, வசதியானது மற்றும் மலிவானது என்பதை அறியத்தருகின்றோம். வாரத்தில் ஐந்து நாட்கள் பயணம் செய்யும் வயது வந்தவருக்கு, இது சராசரியாக ஆண்டுக்கு $1,600 டாலர்களை சேமிக்க உதவியாக இருக்கும்" என்றும் அறிவித்துள்ளார்.




இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

மேலதிக விபரங்களுக்கு விஜேய் தணிகாசலம் அவர்களின் அலுவலகத்தை அடைய vijay.thanigasalam@pc.ola.org அல்லது (416) 283-8448. ஆகியவற்றை பயன்படுத்துங்கள்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# தலைமன்னார் கடற்பரப்பு ஊடாக ஒரே குடும்பத்தை சேர்ந்த மேலும் 5 பேர் அகதிகளாக தனுஸ்கோடியில் தஞ்சம்



(07-02-2024)

இலங்கையில் இருந்து அகதிகளாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 குழந்தைகள் உட்பட ஐந்து பேர் ஒன்றாம் மணல் தீடையில் தஞ்சமடைந்துள்ள நிலையில் புதன்கிழமை (7) காலை அவர்களை மீட்டு மரைன் போலீசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர். இதனால் கடந்த 2022 ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையில் இருந்து இலங்கை தமிழர்கள் தனு'கோடிக்கு அகதிகளாக வந்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கை வவுனியா மாவட்டம் நெடுங்குழி பகுதியை நந்தகுமார் அவரது மனைவி மற்றும் அவரது 3 குழந்தைகள் என ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் 06-02-2024 மாலை மன்னாரில் இருந்து ரூ.1.50 லட்சம் கொடுத்து படகில் புறப்பட்டு 07-02-2024 அதிகாலை ராமேஸ்வரம் அடுத்துள்ள தனு'கோடி அரிச்சல்முனை ஒன்றாம் மணல் திட்டில் கடற்கரையில் வந்திறங்கினர்.

தகவலறிந்த ராமேஸ்வரம் மரைன் போலீசார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்து அத்தியாவசிய பொருட்களின் விலை சற்று குறைந்த வந்த நிலையில் தற்போது மீண்டும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் குழந்தைகளுடன் இலங்கையில் வாழ வழி இன்றி தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக தெரிவித்தனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு 5 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 293 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் விவசாயிகளிடம் கள்ளதராசுமூலம் நெல் கொள்வனவில் ஈடுபட்ட 8 வியாபாரிகளுக்கு எதிராக வழக்கு





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் விவசாயிகளிடம் சட்டவிரோத கள்ள தராசின் மூலம் நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளை அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் புதன்கிழமை (7) தேடி முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையில் சட்டவிரேத தராசின் மூலம் மோசடியாக நெல் கொள்வனவு செய்துவந்த 8 வியாபாரிகளின் தராசில்களை கைப்பற்றியதுடன் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளதாக அளவீட்டு திணைக்கள அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் தற்போது வேளாணமை அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்துவரும் வெளிமாவட்ட வியாபாரிகள் தராசில் மோசடி செய்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்துவருவதாக விவசாயிகள் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. முரளிதரனின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் வயல்பகுதிகளில் நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளின் தராசை பரிசோதனை செய்யமாறு அரசாங்க அதிபர் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இதனையடுத்து சம்பவதினமான நேற்று புதன்கிழமை மாவட்ட பணிப்பாளர் வி. விக்கினேஸ்வரன் தலைமையில் பரிசோதனை உத்தியோகத்தர்களான எம். கிரு'ணானந்தன், எம். ஆர்.எம். றைஸ்கான் உள்ளிட்ட அதிகரிகள் செங்கலடி பிரதேசத்திலுள்ள வயல் பகுதிகளில் லொறிகளில் நெல் கொள்வனவு செய்துவரும் வியாபரிகளை தேடி முற்றுகையிட்டு அவர்களின் தராசில்களை பரிசோதனை செய்தனர்.

இதில் அரச அனுமதியற்ற 5 தராசுகளும் அளவையில் மோசடி செய்யப்பட்ட 3 தராசில்கள் உள்ளிட்ட 8 தராசில்களை கைப்பற்றியதுடன் 8 வியாபரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதுடன் கைப்பற்றப்படட தராசில்களை திணைக்களத்திற்கு கொண்டுவந்தனர்.

இந்த முற்றுகையில் கைப்பற்றி கொண்டுவரப்பட்ட தராசில்களை அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு அரசாங்க அதிபர் நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் தொடர்ந்தும் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு பணித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.





# ஈழத்து குயில் த.கில்மிஷா யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் மீண்டும் இணைவு

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

ஈழத்து குயில் த. கில்மிஷாவின் வெற்றியை பாராட்டி, அவர் கல்வி பயிலும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி சமூகத்தினரால் கௌரவமளிக்கப்பட்டது.

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளுக்கு பின்னர் பாடசாலைகள் ஆரம்பமானது.

இந்நிலையில் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் கில்மிஷாவுக்கு கௌரவம் வழங்கப்பட்டது.

இந்தியாவின் ZEE TAMIL தனியார் தொலைக்காட்சியின் பாடல் போட்டியில் கில்மிஷா பங்கேற்று வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், கல்லூரி மாணவிகள், அயல்பாடசாலை மாணவிகள் பலரும் கலந்துகொண்டனர்.







# நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக நாம் அன்றாட வீண் விரய செலவினங்களை தவிர்க்க வேண்டும் என்கிறார் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்



நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக மனிதர்களின் அன்றாட வீண் விரைய செலவினங்களை தவிர்க்க வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணன் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

76 ஆவது சுதந்திரதினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடை பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வருடங்களாக கொரோனா தொற்று நோய் எற்பட்டிருந்தது. அதில் பல உயிரிழப்புக்களும், மனிதர்களின் மனங்களிலும் க்ட சூழ் நிலை காணப்பட்டது. மேலும் பொருளாதார நெருக்கடியும் எற்பட்டிருந்தது. எனவே இதனை கடந்தா வந்த எமது அரசாங்கம் புதிய உத்திகளுடனான திட்டங்களை முன்னெடுத்து.

நாட்டின் பொருளாதாரத்தினை மேன்படுத்துவதிலும், உணவு உற்பத்தியிலும் ,ஏற்றுமதி விவசயத்திலும் முன்னேற்றம் காணவேண்டியதாக இருக்கின்றது. பாரம்பரிய சிறுதானிய உற்பத்தியிலும் உள்ளூர் உணவுப் பொருட்கள்மேன்படுத்தவேண்டும். ஏற்றுமதியில் நவீன மாயக்கும் சிந்தனையாளர்களாக வளர்க்கவேண்டும்.

எனவே எமது நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தில் இருந்து 77 ஆவது சுதந்திர தினத்திலாவது இவ் திட்டங்கள் அனைத்தும் கிராம மட்டத்தில் இருந்து முன்னெடுக்கப்படவேண்டும். அதுவே இலக்கு அதன் ஊடாக ஒரு சுபீட்சமான வாழ்க்கையினை காணமுடியும் என்றார்.

# வடக்கு மாகாணத்தின் கல்வியில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்திக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு கூட்டம் வவுனியா கலாசார மண்டபத்தில் 06.02.2024 அன்று நடைபெற்றது.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாண அமைச்சின் அதிகாரிகள், கல்வித்துறைசார் உத்தியோகஸ்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர்.

வடக்கு மாகாணத்தின் கல்வித்துறையில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்திக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அமைச்சரின் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்த வடக்கு மாகாண கௌரவ ஆளுநர், மாகாணத்தில் நிலவும் சிக்கல்கள் தொடர்பிலும், கல்வி துறைசார் தேவைப்பாடுகள் தொடர்பிலும் தெளிவுப்படுத்தினார்.

அந்தவகையில், பின்தங்கிய பகுதிகளில் காணப்படும் அனைத்து பாடசாலைகளுக்கும் தேவையான வசதிகளை பெற்றுக்கொடுக்க மத்திய கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இதன்போது கௌரவ ஆளுநர் கோரிக்கை விடுத்தார். வளங்களை சமனாக பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், இதற்காக மாகாண கல்வி அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பௌதீக வளப் பற்றாகுறை மற்றும் ஆசிரியர் பற்றாகுறை காணப்படுவதாகவும், சில பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான முறையில் ஆசிரியர்கள் உள்ளதாகவும் கௌரவ ஆளுநர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சு தரவுகளை திரட்டியுள்ளதாகவும், பாடவிதானங்களின் அடிப்படையில் நியமனங்கள் பெற்றுள்ள ஆசிரியர்களை அந்தத்த பாடங்களுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார்.

இதனூடாக ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாட-சாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினார்.



# கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலய 2024 ஆம் ஆண்டிற்கான உற்சவத்தினை முன்னிட்டு கடற்படையினர் துப்பரவாக்கும் பணியில் ஈடுபடுகின்றனர்



வரலாற்று சிறப்புமிக்க கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான உற்சவம் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை கடற்படையினர் மும்முரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை, இந்தியாவின் கடல் எல்லைக் கோட்டிற்கு அருகில் கச்சதீவு அமைந்துள்ளது. வருடாந்த பெருவிழா வின் பிரதான ஆராதனை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய அருட்தந்தை ஜஸ்டின் ஞானப் பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய தேவையான ஏற்பாடுகளை பக்தர்களின் நலன்கருதி உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை ஏற்படு த்தும் பணியில் கடற்படையினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் உத்தரவுக்கமைய, வடகடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொடவின் மேற்பார் வையின் கீழ், உள்கட்டமைப்பு பணிகளில் கடற்படை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.



இதில் சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகள், தற்காலிக தங்குமிடங்கள், சாலைகள், இறங்குதுறைகள் மற்றும் மின்சார விநியோகத்தை உறுதி செய்தல் ஆகியவை அடங்குகின்றன.



இதேபோன்று, வருடாந்த திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக உயிர்காக்கும் குழுக்கள் மற்றும் மருத்துவ குழுக்களை இலங்கை கடற்படை முன்னெடுத்து வருகின்றனர்.



# வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக ஒளிப்பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட நபர் கைது!



சட்டவிரோத தொழிலான ஒளி பாய்ச்சி கடலில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடலில் சுற்றுக் காவலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வெற்றிலைக்கேணி கடற்படையினர் கட்டைக்காட்டு கடற்பரப்பில் ஒளிப்பாய்ச்சி மீன்பிடித்த அதே பகுதியை சேர்ந்த 23 வயதுடைய நபர் ஒருவர் உடமைகளுடன் கைது செய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடிய செய்திகள்
Canadian News

# "இமாலயப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் பயணத்தில் உலகத் தமிழர் பேரவையிடமிருந்து நாம் விலகி நிற்க மாட்டோம்"

## கனடிய தமிழ் ஊடகங்களைச் சந்தித்த கனடிய தமிழர் பேரவையின் தலைவி ரவீணா ரட்ணசிங்கம் உறுதிபடத் தெரிவிப்பு

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congres Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

"இமாலயப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் பயணத்தில் உலகத் தமிழர் பேரவையிடமிருந்து நாம் விலக நிற்க மாட்டோம். இது ஒரு பரீட்சார்த்த முயற்சியானாலும் அந்த பயணத்தில் கனடிய தமிழர் பேரவை தொடர்ந்து தன்னை இணைத்துக் கொள்ளும். இமாலயப் பிரகடனத்தின் மூலம் இதுவரையில் எமது தமிழ் மக்கள் எதிர்பார்த்தவை நிச்சயம் கிட்டும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு".

இவ்வாறு வெள்ளிக்கிழமை 2ம் திகதி கனடாவின் மார்க்கம் நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலின் கருத்தரங்கு மண்டபம் ஒன்றில் கனடிய தமிழ் ஊடகங்களைச் சந்தித்த கனடிய தமிழர் பேரவையின் தலைவி ரவீணா ரட்ணசிங்கம் மேற்கண்டவாறு மிகவும் உறுதிபடத் தெரிவித்தார்.

அன்றை சந்திப்பில் கனடாவிலிருந்து இயங்கிவரும் அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை சந்தித்த போதே திருமதி. ரவீணா ரட்ணசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் கனடிய தமிழர் பேரவையின் சார்பில் அதன் தலைவி ரவீணா ரட்ணசிங்கம். முன்னாள் தலைவர் சிவன் இளங்கோ. செயலாளர் நாகநாதன் வீரசிங்கம் மற்றும் இயக்குனர் சபை உறுப்பினர் டில்சன் நவரட்ணராஜா ஆகியோர் பிரதான மேசையில் அமர்ந்திருந்தனர். ஆரம்பத்தில் செயலாளர் அவர்கள் "இமாலயப் பிரகடனம் தொடர்பான வரைபுகளை இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதியாக விளங்கும் ரணில் விக்கிரமசிங்க. அத்துடன் அங்கு உள்ள பல அரசியல்வாதிகள் மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் பௌத்த பிக்குகள். இந்து மத பீடங்களின் தலைவர்கள். கிறிஸ்தவ மத பீடங்களின் தலைவர்கள் ஆகியோரிடம் சமர்ப்பித்து உலகத் தமிழர் பேரவையோடும் ஏனைய சில தமிழர் அமைப்புக்களோடு இணைந்து கனடிய தமிழர் பேரவை இந்த முயற்சியில் தொடர்ந்து பயணிக்கவுள்ளதான தகவல் அடங்கிய விபரங்களையும் ஏனைய சில தகவல்களையும் தெரிவித்து, இந்த பிரகடனம் தொடர்பாக கனடா வாழ் தமிழர்கள், தமிழ் ஊடகங்கள் மற்றும் தமிழர் அமைப்புகள் ஆகியவற்றின் மத்தியிலிருந்து எழுந்துள்ள ஆட்சேபனைகளுக்கு பதிலளிக்கு முகமாகவே அன்றை சந்திப்பை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கேள்வி நேரத்தில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தலைவியிடத்தில் முன்வைத்த கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே திருமதி. ரவீணா ரட்ணசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. லோகேந்திரலிங்கம் தனது தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றத்தின் பின்னர் தனது ஆசிரிய தலையங்கம் ஒன்றில் தான் கனடிய தமிழர் பேரவைக்கு எழுதிய பகிரங்க மடலில் "உலகத் தமிழர் பேரவையிலிருந்து கனடிய தமிழர் பேரவை முற்றாக விலகிக் கொள்ள வேண்டும் என்றும் கனடாவில் அந்த அமைப்பு ஆற்ற வேண்டிய பொதுச் சேவைகள் அதிகம் உள்ளன என்று குறிப்பிட்டதை அவருக்கு ஞாபகப் படுத்தி தமது வேண்டுகோளை கனடிய தமிழர் பேரவை நிறைவேற்றுமா?" என்ற கேள்வியை முன்வைத்தார். அதற்கு "இல்லை" என்று தலையாட்டிய தலைவர், அவ்வாறு விலகும் எண்ணம் தங்கள் அமைப்புக்கு இல்லை எனவும். "இமாலயப் பிரகடனத்தை பரீட்சித்துப் பார்க்கும் முற்சியிலிருந்து நாம் விலகி நிற்க மாட்டோம். அந்த பயணத்தில் ஏனைய அமைப்புக்களோடு இணைந்து முயற்சிகளை மேற்கொள்வோம்" என்று உறுதியாகத் தெரிவித்தார்.



திரு. லோகேந்திரலிங்கத்தைப் போன்றே ஏனைய சில ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் முதலில் கனடிய தமிழர் பேரவை இமாலயப் பிரகடனத்தை பரீட்சித்துப் பார்க்கும் முயற்சியிலிருந்து விலக வேண்டும் என்ற கருத்தை மிகவும் உரத்த குரலில் முன்வைத்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அங்கு கனடிய தமிழர் பேரவையின் தலைவி உட்பட ஏனைய மூவரும் ஊடக வியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் ஒருமித்த கருத்துக்களை கொண்டிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு முக்கிய காரணகர்தாக்களாகளில் ஒருவராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மகிந்த ராஜபக்சவை சந்தித்த விடயமான உலகத் தமிழர்களிடத்தில் மிகுந்த வேதனையை கோபத்தையும் தோற்றுவித்துள்ளது என்ற ஆதங்கத்தைப் பகிர்ந்து கொண்ட சில ஊடகவியலாளர்களுக்கு பதிலளித்த கனடிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் நால்வரும் ஒருமித்த குரலில் "அவர் தென்னிலங்கையின் முக்கிய அரசியல் கட்சி ஒன்றின் தலைவராக இன்னும் விளங்குவதால் இமாலயப் பிரகடனத்தை சமர்பித்த குழுவினர் அவ்வாறு அவரை அணுக வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று பதிலளித்த போது அதற்கு ஊடகவியலாளர்கள் ஆத்திரம் மேலிட தங்கள் அதிருப்தியை அந்த இடத்தில் கனடிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுக்கு வெளிக் காட்டினார்கள் என்பது இங்கு குறிப்பிட்த்தக்கது.

இரண்டு மணி நேரத்திற்கு மேற்படி சந்திப்பு இடம்பெற்றாலும் கனடிய தமிழ் ஊடகங்கள் முன்வைத்த பல கேள்விகளுக்கு தகுந்த பதில்கள் கிட்டவில்லை என்பதும் இதை கனடா உதயன் பிரதம ஆசிரியர் நேரடியாகவே அதைச் சுட்டிக்காட்டினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் உலகத் தமிழர் பேரவையின் தலைமையில் கனடிய தமிழர் பேரவையும் இணைந்து செயற்படும் இமாலயப் பிரகடனம் மற்றும் இனப்படுகொலையின் காரணகர்தா மகிந்த ராஜபக்சாவை சந்தித்த விடயம் ஆகியவற்றும் கனடிய அமைப்புக்கள். ஊர்ச்சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய பகுதியினரிடமிருந்து எழுந்த எதிர்ப்புக்களை அணைக்கும் முயற்சியின் சிறுபகுதியையேனும் கனடிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் மேற்கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் "இமாலயப் பிரகடன பயணம் தொடர்பான எதிர்ப்புக்கள் கனடாவிலும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் மத்தியிலும் நீறு பூத்த நெருப்பாகவே" தொடர்ந்து இருக்கப்போகின்றது என்ற கருத்தும் அங்கு பகிர்ந்து கொள்ளப்பட்டது.

***(கனடா மார்க்கம் நகரிலிருந்து சத்தியன்)***


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் பொலிசாரின் பல தடைகளையும் நீதிமன்ற தடையையும் மீறி கறுப்பு கொடி ஏந்தி ஆர்பாட்டத்தில் ஈடுபட்னர்



(கனகராசா சரவணன்ர்)

மட்டகளப்பில் சிறிலங்காவின் சுதந்திர தினம் தமிழர்களின் கரிநாள் எனும் தொனிப் பொருளில் பொலிசரின் பல தடைகளை தாண்டியும் நீதிமன்ற தடை உத்தரவை மீறி பொலிசாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஞாயிற்றுக்கிழமை (04) பொதுமக்கள் கறுப்புக் கொடி ஏந்தியவாறு கல்லடி செபஸ்தியான் தேவாவாலயத்தின் முன்னாள் பாரிய ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினமான நாளை பெப்பிரவரி தமிழர்களின் கரிநாள் என வடகிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பிரகடனப்படுத்தி கிழக்கில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து காந்திபூங்காவரையில் கவனயீர்ப்பு ஆர்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இதற்கு வலிந்து காணாமல் போன உறவுகளின் சங்கங்கள் மற்றும் சில அரசியல்கட்சிகள் ஆதரவு வழங்குவதாக அறிவித்தனர்.

இந்த ஆர்பாட்டத்திற்கு பொலிசார் தடைவித்ததுடன் நா. உறுப்பினர் இருவர் உட்பட 17 பேருக்கு எதிராக நீதிமன்ற தடை உத்தரவு பெற்று இரவு இரவாக வீடுவீடாக வழங்கினர். அதேவேளை மட்டக்களப்பு நகரில் உள்ள முகிய சந்திகளில் பொலிசார் துப்பாக்கியுடன் பாதுகாப்பில் ஈடுபட்டதுடன் கல்லடி பாலம் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் கொழும்பில் இருந்து கலகமடக்கும் பொலிசார் தண்ணீர் வீசும் பவுசர் உட்பட நூற்றுக்கனக்கான பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை திருகோணமலையி இருந்தும் அம்பாறையில் இருந்து ஆர்பாட்டத்திற்கு பஸ்வண்டிகளில் வந்தவர்களை வாகரை மற்றும் கல்லாறு பகுதிகளில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடியில் அந்த பஸ்வண்டிகளை நிறுத்தி பொலிசார் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் காலை 10 மணிக்கு கல்லடி செபஸ்தியான் தேவாலயத்தில் கெட்டும் மழையில் காணாமல் போன உறவுகள் நா. உறுப்பினர் இரா. சாணக்கியன் மட்டு மாநகர முன்னால முதல்வர் ரி. சரவணபவான், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான வடகிழக்கு தலைவர் வேலன் சுவாமி, வடகிழக்கு முன்னேற்ற சங்க தலைவர் த. லவகுமார் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் ஒன்றுதிரண்டனர்.

அங்கு ஒள்று திரண்ட மக்கள் அங்கிருந்து காந்தி பூங்காவரையில் ஆர்பாட்டமாக செல்ல பொலிசார் தடைவிதித்ததையடுத்து தேவாலயத்திற்கு முன்னால் வீதியில் கறுப்பு கொடி ஏந்தியவாறு காணாமல் போன உறவுகளின் திரு உருவபடங்கள் ஏந்தியவாறு தலையில் கறுப்பு துண்டு கட்டியவாறு தமிழர்களின் நிலத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறுமாறும் சுயநிர்ணயத்துடன் வாழ வழி செய், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டும்.

வடகிழக்கில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து, பெரும்பான்மை இனத்துக்கு சுதந்திர நாள் எங்களுக்கு கரிநாள் போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோ'ங்கள் எழுப்பி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து கல்லடி பாலத்தில் இருந்து அரசடி வரையிலான பிரதான வீதி மூடப்பட்டதையடுத்து மட்டக்களப்பிற்கு உள்நுழையும் மற்றம் மட்டக்களப்பில் இருந்து காத்தான்குடி நோக்கி செல்லும் வாகனங்கள் வேறு வீதிகளால் பயணித்ததுடன் அந்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன் ஆர்பாட்டம் பகல் 12 மணிவரை இடம்பெற்ற பின்னர் ஆர்ப்பாட்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.







நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திதன் ஊடக வெளியீடு -- குநடி. 4, 2024

# இலங்கையின் சுதந்திரதினம் சிங்களத்தின் இனவழிப்பையே ஒவ்வொரு ஆண்டும் தமிழர்களுக்கு நினைவுபடுத்தும்!

இலங்கையின் 76வது சுதந்திரதினத்தை வழமைபோல் தமிழீழ மக்கள் கரிநாளாக அனுட்டிக்கும் இந்நாளில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் இனவழிப்பு இலங்கை அரசுக்கு எதிரான எமது போர்க்குரலை ஓங்கி முரசறைகிறோம்.

இலங்கைத்தீவு காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டபோது காலனித்துவவாதிகளால் பறிக்கட்ட்ட ஈழத்தமிழ் மக்களின் இறைமை தமிழ் மக்களுக்கே உரித்தானதாகியிருக்க வேண்டும். இருந்தும், சிங்கள அரசியல் தலைவர்களும் பிரித்தானிய காலனித்துவ்வாதிகளும் இணைந்து பின்னிய அரசியல், இராஜதந்நிரப்பொறிக்குள் தமிழ் மக்கள் அவர்களது சம்மதம் இன்றியே வீழ்த்தப்பட்டார்கள். இலங்கைத்தீவின் அரசை சிங்கள பௌத்த இனவாத அரசாக வளர்த்தெடுப்பதற்கான அடிப்படைகளை சிங்களத் தலைவர்கள் பிரித்தானிய காலனித்துவவாதிகளின் சம்மதத்துடனேயே உருவாக்கிக் கொண்டார்கள்.

காலனியாதிக்கத்தில் இருந்து இலங்கைத்தீவு விடுபடும் நடைமுறையில் தமிழர் தலைவர்களின் கருத்துக்கள் செவிமடுக்கப்படவில்லை. இதன் விளைவாக, இலங்கைத்தீவின் அரசு சிங்கள பௌத்த அரசாக வளர்ச்சி கண்டு, ஈழத் தமிழ் மக்களை இனவழிப்பு செய்யும் திட்டத்தை தனது முதன்மை நோக்காகக் கொண்டு இயங்கி வருகிறது.

தமிழ் மக்கள் தமது இறைமையை சிங்களத்திடம் என்றும் கையளித்ததுமில்லை. பகிர்ந்து கொண்டதுமில்லை. சிறிலங்கா அரசின் 1972, 1978 ஆம் ஆண்டுகளின் அரசியலமைப்புத் திட்டங்களுக்கும் தமிழ் மக்கள் தமது ஆதரவையோ அல்லது சம்மதத்தையோ என்றுமே வழங்கியதில்லை. 1976 ஆம் ஆண்டு வுசயைட யவ டீயசா வழக்கில் மீண்ட இறைமை எனும் சட்ட வரையறையின் அடிப்படையில் தமிழ் மக்களை ஆள்வதற்கு சிறிலங்கா அரசுக்கு எந்தவித சட்ட முகாந்திரமும் இல்லை எனத் தமிழ்த் தலைவர்கள் வாதிட்டனர். சிறிலங்கா அரசின் ஆளுகைக்கு உட்பட்ட மக்களாகத் தமிழ் மக்கள் தம்மைக் கருதியதில்லை.

அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் தமிழ் மக்கள் தமது இறைமையை மீளப் பெற்றுக் கொள்ளுதல் எனும் அடிப்படையில் தமக்கான தனியரசை அமைப்பதற்கான உரித்துடையவர்கள். வட்டுக்கோட்டைத் தீர்மானம் தமிழ் மக்கள் அடிமைகளாக நடத்தப்படும் சூழலில் தமிழீழ அரசை அமைபற்றகான நியாயங்களை எடுத்தியம்புகிறது. இலங்கைத்தீவின் சுதந்திரத்துக்குப் பிந்திய தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை எதிர்த்து தமிழரசுக்கட்சி 1957, பெப்ரவரி 4 ஆம் நாளை கறுப்பு நாளாகப் பிரகடனம் செய்தது. இத் தினத்தில் இலங்கைத் தேசியக்கொடியை இறக்கி கறுப்புக்கொடி ஏற்ற முற்பட்ட திருமலை நடராஜா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். அன்றிலிருந்து பெப்ரவரி 4 தமிழ் மக்களுக்கு கரிநாளாகவே இருந்து வருகிறது.

இலங்கைத்தீவின் சுதந்திரத்துக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அரசகட்டமைப்புக்களின் விளைவாய் ஜனநாயகம் என்பது தடம் புரண்டு தீவு, சிங்கள பௌத்த இனவாதத்தின் பிடியில் சிக்குண்டு இனநாயகமாக அரச கட்டமைப்பு வடிவெடுத்தது. இந் நிலை உருவாக்கம் பெற்றதற்கு சிறிலங்கா அரசுக்கு முட்டு கொடுத்த, கொடுக்கும் அனைத்து அரசுகளும் பொறுப்பெடுக்க வேண்டும்.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் சந்தித்த, சந்திக்கும் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் இந்த இனநாயக அரச கட்டமைப்பே வழிவகுத்தது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் சிங்களத்தின் இனநாயகமும், அரச படைகளின் இராணுவ வன்முறைகளுமே காரணமாக அமைந்தன. இந்த உண்மைகளை நன்கு அறிந்திருந்துமே அனைத்துலக அரசுகள் நியாயத்தின் பக்கம் நிற்காமல் தங்கள் நலன்களின் அடிப்படையிலேயே நடந்து கொண்டன. தமது நலன்களுக்காக அரசுகள் ஆடைகள் ஏதுமின்றி அம்மணமாக அலையக் கூடியவை என்ற கூற்றும் அரசியல் அறிஞர்களால் கூறப்படும் சூழலில் அரசுகளின் இந் நடத்தை ஆச்சரியத்துக்குரியதல்ல.

ஈழத் தமிழ் மக்கள் சிங்கள அரசின் இனவழிப்புக்கு உள்ளாகி வரும் இன்றைய நிலையில் இந்த இனவழிப்பில் இருந்து எவ்வாறு விடுபட முடியும் என்பது குறித்துச் சிந்திப்பதும் செயற்படுவதுமே தமிழ் மக்களின் முதன்மைத் தேவையாக உள்ளது. கடந்து போகும் சிறிலங்காவின் ஒவ்வொரு சுதந்தினதினமும் ஈழத் தமிழ் மக்களுக்கு சிங்களத்தின் தமிழினவழிப்பையே நினைவுபடுத்திச் செல்லும். ஈழத் தமிழர் தேசம் இனவழிப்பு ஆபத்தின்றி வாழ்வது என்பது சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழ அரசு ஈழத் தமிழ் மக்களுக்கு என அமைக்கப்படும் போதே சாத்தியமாகும்.

இதனால், இனிவரும் ஆண்டுகளில் இலங்கையின் சுதந்திரதினம் என்பதனை கரிநாளாக மட்டுமன்றி, தமிழ் மக்கள் தமக்கான அரசை நிறுவுதற்கான அவசியத்தை வலியுறுத்தும் நாளாகவும் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கான செயற்பாடுகளில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

எமது தொடர்ச்சியான போராட்டம் நீதியின் வெற்றிக்கான வாய்ப்பினை வென்றெடுப்பதாக அமையட்டும்!

தமிழர் தலைவிதி தமிழர் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் தொடர்ச்சியாக இறந்து கரையொதுங்கும் ஆமைகள்!



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் அண்மைக்காலமாக இறந்தநிலையில் ஆமைகள் ஒல கரையொதுங்கிவருகின்றன.

இந்த நிலையில் கட்டைக்காட்டு கடற்கரையில் கடந்த சில நாட்களாக இறந்த நிலையில் இரண்டு ஆமைகள் கரையொதுங்கியுள்ளன.

கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகளே இவ்வாறு தொடர்ச்சியாக இறந்து தமது பிரதேசத்தில் அதிகளவு கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் தாயாரின் பூதவுடலுக்கு பல்வேறு அரசியல் தரப்பினர் அஞ்சலி

மன்னார் நிருபர்



(06-02-2024)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனின் தாயார் அமிர்தலிங்கம் செபமாலை தனது 84 ஆவது வயதில் திங்கட்கிழமை (5) காலமானார்.

அவரது பூதவுடல் மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அன்னாரது பூதவுடலுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்களாக பல்வேறு தரப்பினரும், அரசியல் பிரதிநிதிகளும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



புதன்கிழமை 7ம் திகதி காலை தோட்டவெளி ஜோசப் வாஸ் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு விடத்தல் தீவு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மடு கல்வி வலயத்திற்குட்பட்ட மன்/கள்ளியடி பாடசாலை மாணவர்கள், பெற்றோர் போராட்டம்

## மடு வலய கல்விப் பணிப்பாளரின் நடவடிக்கை குறித்து விசனம்




(07-02-2024)

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட மன்.'.கள்ளியடி பாடசாலையில் தொடர்ச்சியாக மூன்று ஆசிரியர்களை வேறு பாடசாலைக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ளமை மற்றும் கள்ளியடி பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்தமை ஆகியவற்றை கண்டித்து குறித்த பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கிராம மக்கள் இணைந்து போராட்டம் செய்துள்ளனர்.

புதன்கிழமை 7ம் திகதி காலை பாடசாலைக்கு முன் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தற்பொழுது பாடசாலை அதிபர் மற்றும் மூன்று ஆசிரியர்கள் இன்றி கள்ளியடி பாடசாலையில் மாணவர்கள் கல்வியை தொடர்கிறார்கள்.

இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டு வருகிறது.

இதற்குக் காரணம் மடு வலய கல்விப் பணிப்பாளரின் நடவடிக்கை என போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆரம்ப பிரிவு மாணவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நியமிக்கும் ஆசிரியர்களுக்கு இணைப்பை வழங்கினால் பாடசாலை நடாத்துவது எப்படி, நிரந்தர ஆசிரியர்கள் எப்போது தருவீர்கள்? உடனடி தீர்வு வேண்டும்.

கல்விக்கான உயர் அதிகாரிகளே பதில் கூறுங்கள், எமது கிராமங்களின் கல்வி அடையாளமே எமது பாடசாலை. அதை அழிக்க வேண்டாம். எமது பிள்ளைகளின் எதிர்காலம்? ஆரம்பக் கல்வியே அஸ்திவாரமாகும், புதிய அதிபர் எங்கே? உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது குறித்த வீதியூடாக பயணித்த மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் போராட்டத்தில் ஈடு பட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.



MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# சிறீதரன் தமிழரசுக் கட்சியை உடைப்பாரா? ஒட்டுவாரா?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



**சு**மந்திரன் அணி தொடர்ந்தும் பலமாக இருப்பதைத்தான் தமிழரசு கட்சிக்குள் நடந்து வரும் இழுபறிகள் காட்டுகின்றன. சுமந்திரன் அணி எனப்படுவது ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல. அது ஏற்கனவே தமிழ் அரசியலில் இருந்தது. அது சுமந்திரனிலிருந்து தொடங்கவில்லை. அது ஏற்கனவே தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்தில் உண்டு. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய ஒரு கட்சி மாவட்ட அபிவிருத்தி சபைகளை நோக்கிச் சறுக்கிய கேவலமான ஒரு கடந்த காலம் உண்டு. தமிழ் மக்களுக்கு மறதி அதிகம். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய ஒரு கட்சி, பின்னர் மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுக்கொள்ளும் ஒரு நிலைக்கு தாழ்ந்து போனது. அப்படி என்றால் வட்டுக்கோட்டை தீர்மானத்தை அவர்கள் விசுவாசமாக நிறைவேற்றவில்லை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் அரசியலை முழுக்க முழுக்க எதிர்ப்பு அரசியல் திசையில் செலுத்திய ஒரு கட்சிக்கு அதை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. வட்டுக்கோட்டை தீர்மானத்தில் இருந்து மாவட்ட அபிவிருத்தி சபைகளை நோக்கிக் கீழிறங்கினார்கள். அதனால் அவர்கள் மீது அதிருப்தியும் கோபமும் அடைந்த இளைய தலைமுறையினர் ஆயுதப் போராட்டத்தை நோக்கித் திரண்டார்கள். தமிழரசு கட்சியின் அல்லது தமிழ் மிதவாதிகளின் ஏமாற்றுகரமான, இரட்டை நாக்கு அரசியலின் விளைவாகத்தான் ஆயுதப் போராட்டம் முன்னிலைக்கு வந்தது. எனவே தமிழரசு கட்சி ஒன்றும் புனிதமான கட்சி இல்லை. அது தொடர்ச்சியாக கொள்கை பிடிப்புடன் தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் செய்த ஒரு கட்சி என்று கூற முடியாது.

தமிழரசு கட்சிக்குள் பொதுவாக இரண்டு போக்குகள் இருந்தன. ஒரு போக்கு வாக்காளர்களை மையமாகக் கொண்ட விட்டுக்கொடுப்பற்ற எதிர்ப்பு அரசியல். இன்னொரு போக்கு கொழும்பை மையமாகக் கொண்ட சட்ட வல்லுனர்களின் அரசியல். கொழும்பை மையமாகக் கொண்ட தமிழ் சட்டவாளர்கள் கொழும்பில் சொத்துக்களையும் சுகங்களையும் கொண்டிருந்தார்கள். அவர்கள் நீதிமன்றங்களில் வழக்காடுவதற்காகவும் நாடாளுமன்றத்திற்கு செல்வதற்காகவும் கொழும்பை மையமாகக் கொண்டு ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார்கள். தேர்தல் காலங்களிலும் தேவையான போதும் வாக்காளர்களை நோக்கி வருவார்கள். தமிழரசு கட்சி எனப்படுவது இந்த இரண்டு போக்குகளையும் கொண்ட ஒரு கட்சிதான். பொதுவாக தலைமைத்துவம் கொழும்பு மைய சட்டத்தரணிகளுக்குரியதாகவே காணப்பட்டது. 2009 க்குப் பின் சம்பந்தர் அதை மேலும் அதிகமாக கொழும்பை நோக்கித் திருப்பினார். அந்த தேவைக்காக சுமந்திரனையும் விக்னேஸ்வரனையும் உள்ளே கொண்டு வந்தார். ரணிலுடன் இணைந்து எக்கிய ராஜ்ஜிய என்ற தீர்வை நோக்கி உழைத்தார். எனவே இதில் சுமந்திரனை மட்டும் ஒரு தனி வில்லனாக பார்க்கத் தேவையில்லை. அவர் ஒரு போக்கின் பிரதிநிதி. கட்சிக்குள் ஏற்கனவே காணப்பட்ட ஒரு பாரம்பரியத்தின் பிரதிநிதியும் கூட.

அந்தப் போக்கு தமிழரசியலில் எப்பொழுதும் இருந்திருக்கிறது. ஆயுதப் போராட்டம் அந்த போக்கிற்கு எதிராக வளர்ச்சி பெற்றது. எனினும் அந்த போக்கை முற்றாக அகற்ற முடியவில்லை. அந்தப் போக்கு தொடர்ந்து நிலைத்திருக்கின்றது என்பதைத்தான் சுமந்திரனின் எழுச்சி காட்டுகின்றது.

அதே சமயம் சிறீதரனின் எழுச்சி என்பது ஆயுதப் போராட்டத்தின் நேரடி விளைவு. ஆயுதப் போராட்டத்தால் அதிகம் பாதிப்படைந்த ஒரு மாவட்டத்தை அவர் பிரதிபலிக்கின்றார். ஆயுதப் போராட்டத்திற்குள் அதிக காலம் வாழ்ந்த ஒரு மக்கள் மத்தியில் இருந்து அவர் வாக்குகளைப் பெற்றார். அவருடைய பலம் ஆயுதப் போராட்ட பாரம்பரியம் தான். தமிழரசு கட்சிக்குள் அவர் பெற்ற வெற்றியும் ஆயுதப் போராட்டத்தின் விளைவுகளில் ஒன்றுதான்.

ஆனால் அவர் மட்டும் தமிழ் அரசியலைப் பிரதிபலிக்கவில்லை. சுமந்திரனும் பிரதிபலிக்கிறார். டக்ளஸ் தேவானந்தா பிள்ளையான் போன்றவர்களும் பிரதிபலிக்கிறார்கள். அவர்களுக்கு வாக்களித்தது தமிழ் மக்கள்தான். அவர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களை தமிழ்த் தேசத்துக்கு எதிரானவர்கள் என்று கூற முடியுமா? இல்லை. அவர்கள் தமிழ்த் தேசத்தின் பிரஜைகள். அவர்கள் யாரை தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதற்காக அந்த மக்களை தமிழ்த் தேசத்துக்கு வெளியே கழித்து விட முடியாது. அவர்களை எப்படி அரவணைப்பது அவர்களையும் உள்ளீர்த்து எப்படி தமிழ்த் தேசத்தைப் பலப்படுத்துவது என்று தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் சிந்திக்க வேண்டும் உழைக்க வேண்டும்.

சுதந்திரனின் விடயத்திலும் சிறீதரன் அப்படிப்பட்ட ஓர் அணுகுமுறையைத் தான் கடைப்பிடிக்க வேண்டும். சுமந்திரன் தமிழரசு கட்சிக்குள் ஒரு யதார்த்தம் அவருக்கு 137க்கும் குறையாதவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அவ்வாறு அவருக்கு வாக்களித்த அனைவரையும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் என்று முத்திரை குத்த முடியுமா? இல்லை. அப்படி முத்திரை குத்தினால் தமிழரசுக் கட்சி இரண்டாக உடைய வேண்டியிருக்கும். எனவே இந்த விடயத்தில் சிறீதரன் பொறுமையாகவும் பெருந்தன்மையோடும் தீர்க்கதரிசனத்தோடும் முடிவுகளை எடுக்க வேண்டிய ஒருவராகக் காணப்படுகிறார்.

சுமந்திரன் தமிழ்த் தேசிய நீக்கத்தைச் செய்கிறார் என்றால் ஸ்ரீதரன் அதற்கு எதிராக தமிழ்த் தேசிய மயமாக்கலைச் செய்ய வேண்டும். தமிழ்த் தேசிய மயமாக்கலுக்கு உரிய வழி வகைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். கட்சிக்குள் எந்த போக்கு பலமடைகின்றதோ அதுதான் கட்சியின் செல்நெறியாகவும் இருக்கும்.

ஒரு தேசமாகக் காணப்படும் மக்கள் கூட்டத்திற்குள் பல்வேறு நம்பிக்கைகளும் பல்வேறு போக்குகளும் இருக்க முடியும். ஒரு தேசம் எனப்படுவது ஒற்றைப் பரிமாணத்தைக் கொண்டது அல்ல. அது பல பரிமாணங்களையும் பல அடுக்குகளையும் பல நுண் அடுக்குகளையும் கொண்ட ஒரு கதம்பமான கலவை. அந்த நுண் அடுக்குகளில் சில எதிர்த்தரப்புக்கு சேவகம் செய்பவைகளாகவும் இருக்க முடியும். எனவே எதிர் தரப்பால் கையாளப்படக் கூடியவர்களையும் எப்படித் தேசத்துக்குள் உள்ளீர்ப்பது? தேசத்தை எப்படி பிரிக்கப்பட முடியாத உருகிப் பிணைந்த ஒரு பலமான கட்டமைப்பாக மாற்றுவது? என்று சிந்திக்க வேண்டிய பொறுப்பு சிறீதரனுக்கு உண்டு. எனவே சுமந்திரனை நீக்குவது அல்லது சுமந்திரனின் ஆதரவாளர்களைக் கழட்டி விடுவது என்று எதிர்மறையாக சிந்திப்பதை விடவும் கட்சியை எப்படி ஐக்கியப்படுத்துவது என்று நேர்மறையாகச் சிந்திப்பது நல்லது.

சிறீதரன் அவருடைய சொந்த மாவட்டத்தில் ஜமீன் என்று அழைக்கப்பட்டவர். ஏன் அவ்வாறு ஜமீன்தார் என்று அழைக்கப்படுகிறார்? அவர் அங்கே அப்படிப்பட்ட ஓர் அரசியலைத்தான் முன்னெடுத்து வந்தார். தமிழரசுக் கட்சியின் ஏனைய கிளைகளோடு ஒப்பிடுகையில் கிளிநொச்சிக் கிளைக்கென்று தனித்துவமான அம்சங்கள் உண்டு. சிறீதரன் அங்கே ஒரு பலமான கட்சிக் கட்டமைப்பை வளர்த்தெடுத்திருக்கிறார். அதேசமயம் அந்த மாவட்டத்தில்தான் அரசியல் எதிரிகளை துரோகிகளாக் எதிரியின் ஆட்களாக சித்தரிக்கும் நிலைமையும் அதிகமாகக் காணப்படுகின்றது. அது போரினால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம். எனவே அங்கே அவ்வாறு அரசியல் எதிரிகளுக்கு முத்திரை குத்துவது இலகுவானது. தனது அரசியல் எதிரிகளை மட்டுமல்ல, தனது கட்சியை சேர்ந்த ஏனைய வேட்பாளர்களும் தனது மாவட்டத்துக்குள் நுழைவதை அவர் அனுமதிப்பது குறைவு என்ற குற்றச்சாட்டு உண்டு. ஒரு ஜமீன்தாரைப் போல அவர் கிளிநொச்சி மாவட்டத் தமிழரசுக் கட்சியை நிர்வகித்து வருகிறார் என்று கூறப்படுவது அதனால் தான்.

ஒரு மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது அவர் அவ்வாறு நடந்து கொண்டார். இப்பொழுது அவர் கட்சியின் தலைவர். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மிகப்பெரிய கட்சி அது.சிறீதரன், எதிர்காலத்தில் ஏனைய கட்சிகளையும் இணைத்து ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்கப் போவதாக வேறு கூறியிருக்கிறார். எனவே இனியும் அவர் ஜமீன்தார் போல நடந்து கொள்ள முடியாது. தன்னை ஒரு பெருங் கட்சியின் பெருந்தலைவர் என்ற அடிப்படையில் தகவமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய தகுதிகளை பெருக்கிக் கொள்ள வேண்டும். தன்னிடம் இல்லாத தகுதிகளை கற்றுக் கொள்ள வேண்டும். தன்னிடம் உள்ள தவறுகளைக் களைய வேண்டும். ஒரு தேசத்துக்குள் எல்லா விதமான நம்பிக்கைகளைக் கொண்ட மக்களும் இருப்பார்கள் என்பதை ஏற்றுக் கொண்டு, சுமந்திரனை ஆதரிப்பவர்களும் அவ்வாறு ஒரு பகுதியினர்தான் என்பதை ஏற்றுக் கொண்டு, அவர் கட்சியைப் பலப்படுத்த வேண்டும். கட்சிக்கு அதிகமாக நண்பர்களை சம்பாதிக்க வேண்டும். ஏற்கனவே சம்பாதித்த பகைவர்களை எப்படி நண்பர்கள் ஆக்குவது என்றும் சிந்திக்க வேண்டும்.

இந்த வழியில் சிறீதரன் தன்னுடைய தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்திக் கொள்வாராக இருந்தால், தமிழரசு கட்சியும் தப்பும்.தமிழ் அரசியலிலும் அவர் தாக்கத்தைச் செலுத்தலாம். இல்லையென்றால் தமிழரசுக் கட்சி இப்போதிருக்கும் பிளவுகளால் மேலும் சிதையக்கூடிய வாய்ப்புகளே அதிகமாகத் தெரிகின்றன.

---



# தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு பல நாடுகள் பொருளாதார ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் உதவி செய்துவருகின்றன என்கிறார் தேசிய மக்கள் முன்னணி சட்டத்தரணி க.சுகாஸ்

இலங்கை செய்திகள் Sri Lanka News



(கனகராசா சரவணன்)

தமிழ் மக்களின் குரல்வலையை நசுக்குவதற்கு ஒடுக்குவதற்கும் ஜனநாயகத்தை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையிலே இலங்கையினுடைய நண்பர்கள் என கூறிக் கொண்டு பல வெளிநாடுகள் இலங்கைக்கு பொருளாதார ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் உதவி செய்துவருகின்றனர் இதனை சர்வதேச நாடுகள் உணரவேண்டும் இவை அனைத்தும் இலங்கையில் நிறுத்தவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஊடக பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள வீட்டில் திங்கட்கிழமை (5) இடம்பெற்ற ஊடகமாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையினுடைய சுதந்திர தினம் தமிழ்ககளை பொறுத்தமட்டில் கரிநாள் என்பதை வலியுறுத்தி தமிழ் தாயகமான வடகிழக்கு எங்கும் பாரிய மக்களுடைய போராட்டங்களும் எதிர்ப்பு அலைகளும் நடைபெற்றது.

இதனை அடக்குவதற்காக இலங்கையின் அரச இயந்திரமான பொலிசாரும் இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் சகல பல பிரயோகத்தை உபயோகித்துள்ளமையை அவதானிக்க முடிந்தது இது வன்முறையினுடைய உட்சகட்டம் ஜனநாயத்தின் குரல்வலையை நசுக்குகின்ற செயற்பாடு தமிழ் மக்களின் கருத்துக்களை குறைந்த பட்சம் வெளிப்படுத்த எந்த வகையிலும் அனுமதிக்க மாட்டோம் என்பதை இலங்கை அரசும் அரச இயந்தரமான பொலிசாரும் இராணுவத்தினரும் மீண்டும் ஒருதடவை சொல்லி இருக்கின்றனர்.

தமிழர் தாயகத்தை பொறுத்தளவில் யாழ்ப்பாணம், கிளிநோச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற பிரதேசங்களில் கரிநாளாக சுதந்திர நாளாக அனுஸ்டிக்க தமிழ் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

அம்பாறையில் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் நானும் எனது தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியும் பங்கேற்றோம் அப்போது அம்பாறை மாவட்டமக்கள் வருகை தந்திருந்த 3 பேருந்துகளை பொலிசார் நிறுத்தி திருப்பி அனுப்பியுள்ளனர்.

பேருந்துகளின் உரிமையாளர்கள் அச்சுறுத்தப்பட்டிருப்பதுடன் ஆர்பாட்டம் முடிந்த பின்னர் ஒரு பேருந்தை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அதன் உரிமையாளரை அச்சுறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் பல்கலைகழக மாணவர்கள் மிக பயங்கரமாக படுமோசமாக தாக்கப்பட்டுள்ளதுடன் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தாக்கப்பட்டுள்ளமையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறு மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டுள்ளார் அப்பாவிகளான மக்கள் கருத்துக்களை ஜனநாயக முறையில் வெளிபடுத்திய பல்கலைகழக மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் இது அனைத்துமே ஜனநாயத்தின் மீதான தாக்குதல் இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த தாக்குதலின் வாயிலாக சர்வதேசத்திற்கு ஒரு விடையத்தை செல்லுகின்றோம் ஜனநாயகத்தை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையிலே இலங்கையினுடைய நண்பர்கள் என கூறிக் கொண்டு பல வெளிநாடுகள் இலங்கைக்கு பொருளாதார ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் உதவி செய்துவருகின்றனர்.

இலங்கையை பொருளாதார நெருக்கடிக்கு கைகொடுக்கின்றோம் என்ற போர்வையிலே சில நாடுகள் டொலர்களை வாரிவாரி வழங்கி கொண்டிருக்கின்றனர் சர்வதேச நாணய நிதியம் உட்பட இவர்கள் வழங்குகின்ற நிதியை பயன்படுத்திதான் இத்தகைய அட்டூழியங்களும் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளும் அடக்கு முறைகளும் தமிழர் தாயகம் எங்கும் மிக வீச்சாக கட்டமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கட்டமைக்கப்பட்ட இனழிப்பு முன்னெடுக்கப்பட்டுக் காண்டிருக்கின்றது எனவே இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகள் சிந்திக்க வேண்டும் நடாத்தப்பட்டது ஒரு அப்பட்டமான காட்டுமிராண்டித்தனம் ஜனநாயத்தின் மீதும் கருத்து சுதந்திரத்தின் மீதான தாக்குதல் ஆகவே ஜனநாயத்தை பாதுகாப்பதற்காக இலங்கைக்கு நிதிஉதவி அளிக்கின்ற நாடுகள் இலங்கை அரசுக்கு வழங்க போகின்ற செய்தி என்ன?

அவர்கள் இதனை வெறுமனவே பார்த்துக் கொண்டிருக்க போகின்றார்களா? தமிழ் மக்களின் குரல்வலையை நசுக்குவதற்கு ஒடுக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றது இதனை சர்வதேச நாடுகள் உணரவேண்டும் இவை அனைத்தும் இலங்கையில் நிறுத்தவேண்டும் தமிழ் மக்களுக்கு ஒரு நீதியும் இனபிரச்சனைக்கு தீர்வும் வழங்கப்படவேண்டும் என்றால் உடனடியாக ஈழத்தில் நடாத்தப்பட்ட நடாத்திக் கொண்டிருக்கின்ற இனழிப்பிற்கு ஒரு சர்வதேச விசாரணை நடாத்துவதுதான் தீர்வாக இருக்கும் என்றார்.

# எங்கள் தாய்நிலம் விடிவுறும் நாளே, தமிழர் எமக்கு சுதந்திர நாள்!

## வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட ஊடக அறிக்கை

வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சிறிலங்காவின் சுதந்திரநாளை கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும், மக்கள் சமூக அமைப்புக்களும், தமிழ் மக்களுமாக இன்று 2024, பெப்ரவரி 4ஆம் திகதி பேரெழுச்சியாக நாம் ஒன்று திரண்டிருக்கின்றோம்.

ஈழத் தமிழர்களாகிய நாம் மரபு வழி தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதை மீண்டும் உலகுக்கு பிரகடனப்படுத்துகின்றோம். வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்பு கோட்பாடு, பொங்கு தமிழ் பிரகடனம் என்பவற்றின் ஊடாக வரலாற்றில் தமிழ் மக்களின் அபிலாசைகள் கூட்டாக பலமுறை வெளிப்படுத்தப்பட்ட போதிலும், ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்காக மீண்டும் ஒரு தடவை எமது ஏகோபித்த வெளிப்படுத்தலை வலியுறுத்திக்கூற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இன்று பேரெழுச்சியாக நமது தாயகத்தின் மட்டக்களப்பு, கிளிநொச்சியில் ஒன்று திரண்டு நிற்கின்றோம்.

தமிழ், சிங்கள தனித்தனி அரசுகளைக் கொண்டிருந்த இலங்கைத் தீவு காலனித்துவ ஆட்சியாளர்களின் நிர்வாகத் தேவையின் நிமிர்த்தம் இணைக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வரலாற்று நிகழ்வுகளை முற்றாக புறந்தள்ளி எண்ணிக்கையில் பெரும்பான்மை அடிப்படையில் முழு நாட்டினதும் அதிகாரங்கள் சிங்கள தேசத்திடம் கையளிக்கப்பட்டமை என்பது ஈழத்தமிழினம் மீது தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளிற்கே வழிகோலியது என்பதோடு, சிறிலங்கா அரசு தமிழ் மக்களிடையே எழும் போராட்டங்கள் மற்றும் உரிமைக்கான குரல்களை இராணுவ பலம் கொண்டு நசுக்குவதிலும், சிங்கள வன்முறைக் கும்பல்களின் வெறியாட்டத்திற்கு அனுமதிப்பத்திரம் அளிப்பதிலுமே நம்பிக்கை கொண்டிருக்கின்றது.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியான சுதந்திர தமிழின அரசை அமைப்பதற்கான வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு 1977 ஆம் ஆண்டு மக்கள் மகத்தான ஆணையை வழங்கி தங்கள் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தியிருந்ததோடு, 1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டமையும் தீர்வுக்கான வழிகளில் முன்னேற்றம் காணப்படாமையின் விளைவாகவே தமிழரிடம் ஆயுதப் போராட்டம் கருக்காண்டது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

தமிழர் மீதான திட்டமிட்ட இனப்படுகொலைகளை கடந்த 75 ஆண்டுகளிற்கு மேலாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களின் துணையோடு தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற கட்டமைக்கப்பட்ட படுகொலைகள் 2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அதியுயர் இனவழிப்பு படுகொலைகள் உட்பட மனித படுகொலைகள், நிலங்களை கையகப்படுத்துதல், பாலியல் வன்முறைகள், பண்பாட்டு மற்றும் பொருளாதார கட்டுமானங்களை அழித்தல் போன்ற வன்முறைகள் மூலம் தமிழ் மக்களுடைய தேசத்துக்கான தகுதிப்பாட்டை தாங்கிநிற்கும் அனைத்து விழுமியங்களும் அழித்தொழிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களிற்கான தீர்வு முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு, தமிழ் மக்களினுடைய அபிலாசைகளை சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் பதின்மூன்றாம் (13ஆம்) திருத்தத்தினுள் முடக்க எத்தனிக்கும் அனைத்து முயற்சிகளையும் முற்றாக நிராகரிப்பதோடு, தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக தமிழர்களை ஒரு தனித்த தேசமாக அவர்களின் பாரதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமை அங்கீகரிப்பது மட்டுமே மேலே குறிப்பிட்ட அனைத்து ஒடுக்கு முறைகளுக்கும் மீள நிகழாது இருப்பதை உறுதி செய்யும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பின்வரும், தமிழ் மக்களின் சமகால அடிப்படைச் சிங்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.

1. எமது உறவுகளை தேடும் உரிமை, கருத்துரிமை, பேச்சு உரிமை, வளங்களை அனுபவிக்கும் உரிமை, நீதி கோரும் உரிமை என்பன பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ் நிலை பாதுகாப்பு சட்டம் மற்றும் நிறைவேற்ற முன்மொழியப்பட்டுள்ள ஏனைய சட்டங்களால் மறுக்கப்படுகின்றது. ஆகவே இச்சட்டங்கள் மீளப்பெறப்பட வேண்டும்.

2. தொல்பொருட்த் திணைக்களம், வன அஜீவராசிகள் திணைக்களம். வனவள் பாதுகாப்பு திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திணைக்களம் என்னும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத் திட்டங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும்.

3. தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாட்டை சிதைக்கும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து சிங்கள குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்.

4. விடுவிக்கப்படாது எஞ்சியுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளும் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான அனைத்துலக விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன் அவர்களுக்கு அனைத்துலக நீதி வழங்கப்படுவதோடு குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

6. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் இளையோர்கள் கூட்டாக சிந்திப்பதைத் தடுத்து உளவியல் ரீதியாக சிதறடிக்கும் நோக்கம் கொண்டு அரச படைகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் விநியோகம் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

7. பிராந்திய பண்பாட்டுப் பல்கலைக்கழகங்களாக விளங்கும் எமது யாழ்ப்பாண, கிழக்கு, வவுனியாப் பல்கலைக்கழகங்கள் பிராந்தியம் சார் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை மையமாகக் கொண்டு செயற்படுதலையும் தமிழ் மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி சாரா செயற்பாடுகளில் அவர்களது வாய்ப்புக்களின் இருத்தலையும் உறுதி செய்ய வேண்டும்.

8. மனித உரிமை மீறல்கள் வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்கள், திட்டமிட்ட இன அடக்குமுறைக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வரும் மாணவர்கள் மற்றும் மக்கள் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் மற்றும் கைது செய்யப்படுதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

9. தமிழ் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்படுத்தப்படும் அனைத்து வகையான அச்சுறுத்தல்கள், தடைகளை முடிவுக்கு கொண்டு வரவும் நினைவு கூறும் உரிமையை உறுதி செய்யுமாறும் வேண்டுகின்றோம்.

10. கால காலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பிற்கு அனைத்துலக நீதி பொறிமுறை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (ஐஊஊ) அனைத்துலக நீதிமன்றம் (ஐஊது) ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையில் சிறப்பாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் பொறிமுறைகளும் அனுமதிக்கப்பட வேண்டும்.

11. தமிழினப் படுகொலையை நிகழ்த்தி தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தொடர்ந்தும் உரிமை மீறல்கள், சமூக விரோதச் செயல்களுக்கு பாதுகாப்பாக உள்ள இராணுவத்தினர் தமிழர் தாயகத்திலிருந்து அப்புறப்படுத்துவதுடன், மக்களின் செயற்பாடுகளில் தலையிடுவதையும் முற்றாக நிறுத்த வேண்டும்.

இலங்கையில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு ஈழத்தமிழரின் தேசிய இன பிரச்சனையில் மரபு வழி தாயகம், தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு அரசியல் தீர்வும் அனைத்துலக சமூகத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணை பெறப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து எம்மை நாமே ஆழக்கூடிய நிரந்தர தீர்வும் பொது வாக்கெடுப்பின் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் சார்பாக இந்த பிரகடனத்தின் ஊடாக உலகுக்கு அறிவிக்கின்றோம் - என்றுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சுமந்திரன் ஒரு குழப்பக்காரர், தமிழ் அரசியலில் அவரது இருப்பு இல்லாதொழிக்கப்பட வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்கள் அமைப்பின் பேச்சாளர் ராஜ்குமார் வெளியிட்ட ஊடக அறிக்கை

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்களின் போராட்டம், 06.05.2024 அன்றுடன், 2543 வது நாளை எட்டியது.

"சுமந்திரன் ஒரு குழப்பக்காரன், தமிழ் அரசியலில் அவரது இருப்பு இல்லாதொழிக்கப்பட வேண்டும்." என்று தலைப்பிட்டு, காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்கள் சார்பில், அந்த அமைப்பின் பேச்சாளர் திரு. ராஜ்குமார் அவர்களினால் ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ் ஊடக அறிக்கையை முழுமையாக இங்கே தருகிறோம்!




சுமந்திரன் எங்கு சென்றாலும் குழப்பத்தை ஏற்படுத்தி மகிழ்கில்பவர். இதோ சில உதாரணங்கள்:

1. வடக்கு மாகாண சபைக்குள் குழப்பத்தை ஏற்படுத்திய அவர், பின்னர் சி.வி.கே. சிவஞானத்தை கையாண்டு விக்னேஸ்வரனை பதவி விலகுமாறு அழுத்தம் கொடுத்தார்.
2. காங்கிரஸ், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் ஆகிய அனைத்து கட்சிகளும் சமீபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைபில் இருந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது. சுமந்திரனின் தலையீட்டினால் ஏற்பட்ட அதிருப்தியே அவர்களின் இந்த முடிவுக்கான உந்துதல்.
3. திருகோணமலையில் உள்ள தமிழரசு கட்சியை நிலைமையை இப்போது கூர்ந்து கவனிப்போம். நாம் அனைவரும் நேரில் அவதானித்தவாறு, இந்த குழப்பநிலை ஏற்பட்டதில் சுமந்திரனுக்கு கணிசமான பங்கு உண்டு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம். மோதல்கள், கூச்சல்கள், சுமந்திரனின் ஜனநாயக விரோத செல்வாக்கு ஆகியவற்றால் சூழல் நிறைந்திருந்தது.
4. முதலில் 20க்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களைக் கொண்டிருந்த லண்டன் புவுகு இன் நிலைமையை ஆராய்வோம். சுமந்திரனின் தலையீட்டினால் புவுகு இன் அங்கத்துவம் கணிசமான அளவு மூன்றாக தனி நபர்களாக குறைக்கப்பட்டது.
5. USA இல் USTPAC பற்றி விரிவாகப் பார்ப்போம். சுமந்திரனின் ஈடுபாட்டைத் தொடர்ந்து சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. முதலில், அமைப்பு அதன் பெயரை ருளுவுயுபு என மாற்றியது. மேலும், சுமந்திரனின் நெருங்கிய நண்பரும் USTAC இன் ஸ்தாபக உறுப்பினருமான எலியாஸ் ஜெயராஜா, அவரது இமாலய மற்றும் கொழும்பு விஜயத்தின் பின்னர் ருளுவுயுபு இலிருந்து நீக்கப்பட்டார். சுமந்திரனின் தலையீடு காரணமாக USTPAC இன் பல உறுப்பினர்கள் விலகினார்கள்.
6. தமிழர் போராட்டத்தை ஆதரிப்பதற்காக கனடிய தமிழ் காங்கிரஸ் (CTC) 2009 இல் நிறுவப்பட்டது. எனினும் சுமந்திரனின் தலையீட்டின் பின்னர் அந்த அமைப்பு இலங்கைக்கு ஆதரவாக சாய்வடைய ஆரம்பித்தது. CTC இல் பணிபுரி'யும் சிறுமிகளுக்கு எதிராக சில உறுப்பினர்களால் பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் உள்ளன. இமாலய பிரகடனத்தைத் தொடர்ந்து, இமாலய பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரும் மற்ற ஐந்து உறுப்பினர்களும் CTC ,லிருந்து ராஜினாமா செய்தனர். CTC அவர்களின் மேற்கத்திய பாணி பொங்கல் நிகழ்வையும் ரத்து செய்தது. சமீபத்தில், CTC கட்டிடத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக செய்திகள் வந்தன.
7. கனடாவில் உள்ள ஐயப்பன் கோவிலுக்கு சுமந்திரன் சென்று வந்ததை அடுத்து, அங்கு பூசைக்கென எடுத்துச் சென்ற கார்த்திகைப்பூ மாலையை வாங்க, கோவில் நிர்வாகம் மறுப்பு தெரிவித்திருந்தது. இதன் தொடர்ச்சியாக தமிழ் கனடியர்கள், கோயிலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து, கூ70,000 ந்'டஈடு பெற்றுக்கொண்டனர்.
8. சுமந்திரன் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் போதெல்லாம் பகி'கரிப்புகளும் சண்டைகளும் ஏற்பட்டுகின்றன.
9. சுமந்திரனின் கடைசி கனடா விஜயம் சண்டையுடன் முடிந்தது.
10. சுமந்திரன் தனது விஜயத்தின் போது லண்டனில் உள்ள தமிழர்களிடம் இருந்து மறைந்திருந்தார்.
11. சுமந்திரன் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஊழல் விவகாரங்களை மறைக்க முற்பட்ட போது அங்கு குழப்பத்தை ஏற்படுத்தினார். இதனால் அமெரிக்க மி'ன் நிதி உதவியை குறைத்தது. இந்த ஊழலை எதிர்த்துப் போராட, விரிவான நிர்வாக சீர்திருத்தங்கள் கோரப்பட்டன, ஆனால் அனுமதிக்கப்படவில்லை. இதன் விளைவாக, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு ஆதரவளிக்கும் அமெரிக்க மி'னிடம் நிதியுதவி பெற சுமந்திரன் இரகசியமாக அமெரிக்காவின் பாஸ்டன் நகருக்குச் சென்றார். துரதிர்'டவசமாக, அவரது முன்மொழிவுகள் இறுதியில் அமெரிக்க மி'னால் நிராகரிக்கப்பட்டன, நிதியுதவியை கூட்டுவதற்கான அவரது முயற்சிகளை நிறுத்தியது.
12. சுமந்திரனின் குறுக்கீட்டின் பின்னர், உடுவில் பாடசாலையின் அதிபர் 'ராணி மில்ஸ், யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்த சில மதகுருமார்களால் மேற்கொள்ளப்பட்ட வாய்மொழி மற்றும் உடல்ரீதியான தாக்குதல்களை எதிர்கொண்டார். பள்ளி மாணவர்களையும் குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
13. அவரது குழப்பமான நடத்தையை நாம் இன்னும் பட்டியலிடலாம். தமிழரசு ஏன் தமிழ் அரசியலில் சுமந்திரனை விரும்புகிறார்கள் என்று கேட்க விரும்புகிறோம்.
14. இமாலய பிரகடனத்தின் ஆதரவாளரும் சுமந்திரன் சார்பாக செயற்படும் திரு. குகதாசனும் செயலாளராக நியமிக்கப்படஉள்ள நிலையில், எதிர்வரும் தேர்தலில் எம்.பி ஆசனத்தில் செல்வாக்கு செலுத்தும் அதிகாரம் தமிழரசுக்கு இருக்காது. இந்த விடயம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சுமந்திரனுக்கு மட்டுமே வழங்கப்படும்.

சுமந்திரன், எதிர்வரும் தேர்தலில் பல்வேறு பதவிகளுக்கான வேட்பாளர்களாக, முன்னதாகவே, தானாக தனது நண்பர்களை நியமித்திருந்தார். இந்த பதவிகளில் முதலமைச்சர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை நியமித்திருந்தார். இதில் கிராம, நகர தலைவர்கள் மற்றும் ஏனைய முக்கிய அரசியல் பாத்திரங்களில் அடங்குவர்

அவர் தனது தலைமைத் தேர்தலுக்கான வாக்குகளைப் பெறுவதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். ஆனால், அவரது முயற்சி தோல்வியடைந்ததால், அரசியல் வேட்பாளர்களை நியமிக்கும் அதிகாரத்தை, செயலர் பதவியை பெறுவதில் கவனம் செலுத்தினார்.

இப்போது கனேடிய தமிழ் காங்கிரஸின் முன்னாள் உறுப்பினரும் ஹுமாலயா பிரகடனத்தை அர்ப்பணிப்புடன் ஆதரித்தவருமான திரு. குகதாசன் மற்றும் அதன் முன்னோடிகளில் ஒருவரான திரு. குகதாசன் வயோதிபர், சுமந்திரனின் நெருங்கிய நண்பர், அதனால்தான் சுமந்திரன் அடுத்த செயலாளராக வரவேண்டும் என்று வக்காலத்து வாங்குகிறார். குகதாசன் அடிப்படையில் திரு. சுமந்திரனுக்கு பினாமி.

சுமந்திர எதேச்சதிகார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்பதை நிலைமை தெளிவாக வெளிப்படுத்துகிறது. கடந்த 15 ஆண்டுகளாக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றவர்களிடம் கருத்து கேட்காமல் மேற்கொள்ளப்பட்டு வருவதால், ஜனநாயக அரசியலில் அவரது இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இதனால், தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு மற்றும் அரசியல் அதிகாரம் இல்லாமல் தொடர்ந்து வருகிறது. தமிழர்களின் தேவைகளை முதன்மைப்படுத்தும் வகையில் அவர் ஒதுங்குவது அவசியம்.

தமிழரசுவில் இருந்து சுமந்திரனை நீக்கினால், உலக அரங்கில் தமிழர்களுக்கு அவர் முன்வைத்துள்ள எதிர்மறையான பிம்பம் இல்லாது அவர் ஏற்படுத்திய குழப்பம் தீரும். அடுத்து என்ன நடக்கும் என்பது இங்கே.

1. பௌத்தத்திற்கு இனி முதன்மையான இடம் இல்லை.
2. "எக்கியா ராஜா" க்குள் சம்'டியும் மறைக்கப்பட்டுள்ளது என்பது பொய்யாகும்.
3. போர்க்குற்றத்தை கையாள இலங்கையில் உள்ளூர் நீதிமன்றம் இல்லை, வழக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐசிசி) மாற்றப்படும்.
4. இனப்படுகொலை, ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறையை செயல்படுத்துவதாகக் கூறப்படும் நல்லிணக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவும்.
5. யாழ் கிறிஸ்தவ பாடசாலைகள், தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் நிலவி வரும் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.
6. எதிர்காலத்தில் சசிகலாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினராகும் வாய்ப்பு வரலாம்..
7. தமிழர் வாக்கெடுப்பு ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆதரிக்கப்படும்.
8. தந்திரமான, கபடமான இரகசியமான சிங்கள ஏஜென்ட் சுமந்திரனைப் பாதுகாக்க இராணுவத்தினரோ, சிங்களப் பொலிஸாரோ, சிங்கள நீதிபதிகளோ தேவையில்லை.
9. இமயமலைப் பிரகடனம் தூக்கி எறியப்பட்டு கடலில் வந்து சேரும்.
10. இறுதியாக, தமிழர் இறையாண்மையை அடைவதை இலக்காகக் கொண்ட ஒரே கொள்கையின் கீழ் எந்தவித குழப்பமும் இன்றி ஒன்றிணைய முடியும்.




# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL VACANT LAND CONSTRUCTION




**NESAN** Subramaniam **416-908-5656**

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity Line of Credit • Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By

Mortgage Alliance · RightBroker = RightMortgage · Brokerage #10330 / Licence # M15001465
Scotiabank · TD Canada Trust · National Bank · First National Financial LP · MCAP · Home Trust · Equitable Bank · RFA · radius financial · RMG mortgages


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தென்னிந்திய நடிகைகள் தங்கியுள்ள விடுதிகளை முற்றுகை இடுவோம் – அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு பகிரங்க எச்சரிக்கை!

யாழ்ப்பாணத்தில் அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்பாட்டில் நாளைய தினம் இந்திய பிரபல பாடகர் ஹரிஹரன் கலந்து கொள்ளும் இசை நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் வருகை வந்துள்ள திரைப்பட நடிகர் நடிகைகளோடு புகைப்படம் எடுப்பதற்கும் சந்திப்பதற்கும் ஒருவருக்கு ரூபா 30000 அறவிடப்படும் என குறித்த தனியார் நிறுவனத்தினால் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக யாழ்ப்பாண ஊடக அமையத்தில் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி மு. தம்பிராசா நடத்திய ஊடக சந்திப்பிலே குறித்த விடயத்தை வன்மையாக கண்டித்ததோடு குறித்த செயற்பாடு இடம்பெறுமானால் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு நடிக நடிகைகள் தங்கியுள்ள விடுதிகளை முற்றுகையிடுவோம் என பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணம் என்பது தமிழர்களுடைய பண்பாட்டுக்கும் கலாச்சாரத்திற்கும் உலக அளவில் பெயர் பெற்ற இடமாகும். இந்திய திரைப்படங்களில் கூட யாழ்ப்பாணத்தின் கலாச்சாரத்தைப் பற்றி பெருமையாக பேசியுள்ளார்கள்.

ஆனால் இங்கே சினிமா நடிகைகளை அழைத்து வந்து அவர்களோடு புகைப்படம் எடுப்பதற்கு பணம் பெறுகின்ற கேவலமான செயலை குறித்த தனியார் நிறுவனம் நடத்த முற்படுகின்றது.

இன்றைக்கும் வலிவடக்கில் இரவோடு இரவாக பூர்வீக நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அந்த நிலத்தில் குடியேற முடியாத அவலங்களோடு நிலமீட்பிற்காக வருகின்றார்கள்.

அப்படியான மக்களுடைய காணிகளை அபகரித்து தன்னுடைய சர்வாதிகார ஆட்சியிலே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அங்கே விசாலமான சொகுசு மாளிகையை அமைத்திருந்தார்.

அந்த மாளிகையை இன்றைக்கு பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் ரணில் அரசு குறித்த தனியார் நிறுவனத்திற்கு தாரைவார்த்துள்ளது.

ஆனால் 14க்கு மேற்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் தங்களுடைய நிலத்துக்காக இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான இழப்பீடுகளோ அல்லது எந்த விதமான மாற்று ஏற்பாடுகளோ இதுவரை செய்யப்படவில்லை.

இந்த நிலையிலே லட்சக்கணக்கான பணத்தினை பெற்று யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ள இந்திரன் என்பவர் எங்களுடைய கலாச்சாரத்தையும் அழிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தின் பண்பாட்டை சீரகுலைக்கும் முகமாக இவ்வாறான செயற்பாட்டை நடத்த முற்படுகின்றார்.

உண்மையிலேயே நாங்கள் இந்திய கலைஞர்களுக்கோ அல்லது சினிமா துறையினருக்கோ எதிரானவர்கள் அல்ல.

எங்களது போராட்டங்களையும், தமிழ் மக்களுடைய உணர்வுகளையும் பல தென்னிந்திய திரைப்படங்கள் வெளிக்கொண்டு வந்திருக்கின்றன. அதுமட்டும் இல்லாமல் பல தென்னிந்திய பாடகர்களும் ஈழத்து வலிகளை வெளிக்கொணரும் முகமாக அல்லது போராட்டத்திற்கு ஆதரவாக தங்களுடைய குரல்களிலே பாடல்களை பாடி உள்ளார்கள்.

ஆகவே வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தும் முகமாக இவ்வாறான பிரபல இசை கலைஞர்கள் வந்து இங்கே நிகழ்ச்சி நடத்துவதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல.

இந்த மண்ணிலே அவர்கள் வந்து எங்கள் கலைஞர்களுடன் இணைந்து இசை நிகழ்ச்சிகளை செய்வதையும் நாங்கள் இருகரம் கூப்பி வரவேற்கின்றோம்.




ஆனால் இவ்வாறான நிகழ்ச்சிகளின் பெயரால் எங்கள் மக்களை வைத்து வியாபாரம் செய்வார்களானால் அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு எந்த அளவுக்கு சென்று போராடவும் ஒருபோதும் பின்நிற்காது என்பதையும் இந்த வேளையிலே தெரிவித்துக் கொள்கின்றோம்.

உண்மையிலேயே புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வந்து இங்கே முதலீடுகளை செய்பவர்களினால் எங்களுடைய மக்களுக்கோ அல்லது இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பையும் அல்லது பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்க வேண்டுமே அல்லாமல் இளைஞர்களை திசை திருப்பும் முகமாக எமது தமிழ் இளைஞர்களின் தமிழ் தேசிய உணர்வை மழுங்கடிக்கும் முகமாக இவ்வாறு நடிகைகளோடு கட்டணம் கட்டி புகைப்படம் எடுக்கின்ற செயற்பாட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த இசை நிகழ்வானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மகிழ்விக்கவும் அவர்களை ஆற்றுப் படுத்தவும் இலவசமாகவே நடத்துகின்றோம் என்று சொல்லி நிகழ்வு ஒழுங்குகளை செய்தவர்கள் இன்றைக்கு 25000 ரூபா பெற்று ரிக்கெட் விநியோகிப்பதை நாங்கள் கண்டு கொண்டிருக்கின்றோம்.

அவர்கள் இந்த மண்ணிலே இருந்து இருப்பதையும் சுரண்டிக்கொண்டு போவதற்கா இந்த நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நுழைந்துள்ளது என்ற கேள்வியையும் நான் இந்த வேளையிலே எழுப்ப விரும்புகின்றேன்.

எனவே இன்றைக்கு தென்னிந்திய சினிமாத்துறை உலக அளவில் வளர்ந்துள்ளதிற்கு எங்களுடைய ஈழத் தமிழர்களுடைய பங்களிப்பு என்பது மிகையாகாது என்பதை பல பிரபலமான சினிமா நடிகர்களும் வெளிப்படையாகவே கூறியுள்ளார்கள்.

ஈழத் தமிழர்களால் தான் தாங்கள் இன்றைக்கு உலக அளவில் பிரபலமாக இருப்பதற்கும், கோடிக்கணக்குகளிலே சம்பளம் பெறுவதற்கும் ஈழத் தமிழர்கள் தான் காரணம் என்பதை கூறியுள்ளார்கள்.

குறிப்பாக இன்றைக்கு இந்திய சினிமாவையே கட்டி ஆளுகின்றவர் ஒரு ஈழத் தமிழர். அவர் பல கோடிக்கணக்கிலே அங்கே முதலீடு செய்வதனால் தான் பல இந்திய சினிமா நடிகர்கள் மட்டுமின்றி சினிமா துறையை நம்பி இருப்பவர்கள் கூட பல்லாயிரக்கணக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே அப்படியாக சினிமாத்துறைக்கு பங்களிப்பு செய்கின்ற ஈழத்தமிழர்களை கேவலப்படுத்தும் முகமாக இந்த தனியார் நிறுவனத்தினுடைய செயற்பாடு இடம்பெறுகின்றது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே இவற்றை தென்னிந்திய நடிகைகளும் நடிகர்களும் உணர்ந்து கொண்டு எங்களுடைய மக்களுடைய வலிகளையும் துன்பங்களையும் உணர்ந்து கொண்டு செயல்பட வேண்டும் இல்லையேல் நீங்கள் தங்கியுள்ள இடங்களை முற்றுகையிடுவோம் எனவும் மீண்டும் ஒரு தடவை நீங்கள் யாழ் மண்ணிலே கால் பதிக்க முடியாமல் செய்து விடுவோம் எனவும் பகிரங்கமாக எச்சரிக்கை விடுக்கின்றேன் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி மு. தம்பிராசா தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை சாவல்கட்டு மீனவர்களின் கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை சாவல்கட்டு கிராம மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் சிலர், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை, யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் (08.02.2024 அன்று) சந்தித்து தங்களின் கோரிக்கைகளை முன்வைத்தனர். காக்கைத்தீவு கடற்கரையில் தங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியை துப்பரவு செய்துக்கொள்வதற்கும், மீன்பிடி துறையை மேம்படுத்திக்கொள்வதற்கும் உரிய அனுமதிகளை பெற்றுக்கொடுக்குமாறு கோரிக்கைகளை கௌரவ ஆளுநரிடம் முன்வைத்தனர்.



ஆனைக்கோட்டை சாவல்கட்டு கிராம மீனவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கௌரவ ஆளுநர் கூறினார். அத்துடன் மீன்பிடி துறையை துப்பரவு செய்வதற்கான தற்காலிக அனுமதியை பெற்றுக் கொடுப்பதாகவும், உள்ளுராட்சி மன்றத்தினூடாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை உரியவகையில் முன்னெடுப்பதாகவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். மேலும் அயல் கிராமங்களுடன் சினேகபூர்வமாக செயற்பட்டு, ஒன்றிணைந்த அழைப்பை விடுக்கும் பட்சத்தில் நேரடியாக களத்திற்கு வருகை தரவும் தாம் தயாராக உள்ளதாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள், ஆனைக்கோட்டை சாவல்கட்டு கிராம மீனவர்களிடம் தெரிவித்தார்.





# வண்ணை ஸ்ரீ வீரமாகாளி இரதோற்சவம்

வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் இரதோற்சவம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

கடந்த 01.02.2024 அன்று அலங்கார உற்சவத்துடன் ஆரம்பமாகிய திருவிழாவில் 08-02-2024 அன்று இரதோற்சவமும், எதிர்வரும் 09.02.2024 அன்று தீர்த்தோற்சவமும் இடம்பெற்று, 10.02.2024 மாலை அலங்கார பூந்தண்டிகை உற்சவத்துடன் திருவிழா இனிதே நிறைவடையும்.

இதில் பல இடங்களில் இருந்து வருகை தந்த பக்தர்கள் கலந்துகொண்டு அம்மன் அருட்காட்சத்தினை பெற்றுச் சென்றனர்.





# 2005 சமாதான காலத்தில் வெலிக்கந்தவில் படுகொலை செய்யப்பட்டகௌசல்யன், சந்திரநேரு ஆகியோரின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்



2005 சமாதான காலத்தில் வெலிக்கந்தவில் படுகொலை செய்யப் பட்டகௌசல்யன், சந்திரநேரு ஆகியோரின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

2005 சமாதான காலத்தில் வெலிக்கந்தவில் படுகொலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் தளபதி கௌசல்யன் உள்ளிட்ட போராளிகள் மற்றும் முன்னாள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. சந்திரநேரு ஆகியோரின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் 08.02.2024 வியாழக்கிழமை மாலை 05 மணியளவில் கொக்குவிலில் இடம்பெற்றது.



தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் ப.தர்சானந், வலி. தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான அ. ஜோன் ஜிப்பிறிக்கோ, திருமதி. சி. மரியறோசறி (செல்வி), ரமணன் மற்றும் வலி. தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை உறுப்பினரான திருமதி. வதனி காந்தராசா மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டு தமது அஞ்சலியினை செலுத்தினர்.

நிகழ்வில் அகவணக்கம், சுடரேற்றல், மலரஞ்சலி, புகழுரை என்பன இடம்பெற்றன.

- நடராசா லோகதயாளன் -

# தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கான ஒழுங்கான அரசியல்த் தீர்வு இல்லாமல் ஒரு ஆயுதத் தீர்வை இலங்கை அரசாங்கம் முன் வைக்கின்றது என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



**த**மிழ்த் தேசியப் பிரச்சனை, அதற்கான ஒழுங்கான அரசியல்த் தீர்வு இல்லாமல் ஒரு ஆயுதத் தீர்வை இலங்கை அரசாங்கம் முன் வைத்து அதற்காக கடன்கள் பெற்று பொருளாதாரத்தை நாசமாக்கி விட்டிருக்கின்றது என தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதபதி ரணில் விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றியிருந்தார். அந்த உரை தொடர்பில் நேற்றைய தினம் நாடாளுமன்றில் உரையாற்றும்போதே எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இங்கே மேலும் உரையாற்றுகையில், ஜனாதிபதி தனது உரையில் நாட்டின் இனப்பிரச்சனை தொடர்பில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. தான்பதவியேற்றபோது மக்களிற்கும் இந்த சபைக்கும் அவர் சொன்னது உடனடியாக இனப்பிரச்சணைக்கான தீர்வை நாங்கள் கண்டுகொள்ளுவோம் நீங்கள் தயாரா, நீங்கள் தயாரா என ஒவ்வொருவரையும் கேட்டு 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம இந்த சபையிலே அனைவரையும் சேர்த்து அனைத்துக் கட்சிகளின் மாநாட்டையும் 3 தடவைகள் கூட்டி 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் இது தீர்க்கப்படும் என்றெல்லாம் பறைசாற்றினார்.




அப்பொழுது எங்களை அழைக்கின்றபொழுதே நாங்கள் சொன்னோம் இது வெறும் வார்த்தைகள் இதனைச் செய்ய அவருக்கு அரசியல்ப் பலம் கிடையாது இனப்பிரச்சனைக்கான தீர்வை எதிர்க்கிரவர்களை போலிப் பெரும்பான்மையாக வைத்துக்கொண்டு ஜனாதிபதி இதனைச் செய்ய முடியாது. வெறும் வார்த்தை ஜாலங்களாலே எம்மை ஏமாத்துகின்றார் ஆனாலும் நாங்கள் இதற்கு தடங்களாக இருந்தோம் எனச் சொல்லாமல் இருப்பதற்காக அனைத்துக் கூட்டங்களிற்கும் நாங்கள் போனோம். எங்களுடைய ஒத்துழைப்பு முழுமையாக இருக்கும் என்பதனை வெளிப்படுத்தினோம். அப்படிச் செய்திருந்தும்கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 3வது, 4வது கூட்டத்திலே எமது கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதிபதியைப் பார்த்துச் சொன்னார் இந்தக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளிலே ஒரேயொரு முடிவுதான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனச் சொன்னார்.

கூட்டங்கள்கூடி, கூட்டங்கள்கூடிச் செய்வதாக கூறிப் பழக்கமாகிவிட்ட ஜனாதிபதி இந்த விடயத்தை முற்றுமுழுதாக மறுதலித்தவராக அரசாங்க கொள்கைப் பிரகடனத்தை இங்கே உரையாற்றியிருக்கின்றார். இதனை நாங்கள் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம். ஏனென்றால் இந்த நாட்டிலே பொருளாதாரப் பிரச்சணை ஏற்படுவதற்கு அத்திவாரமே இந்த நாட்டிலே இருக்கின்ற தமிழ்த் தேசியப் பிரச்சணை, அதற்கான ஒழுங்கான அரசியத் தீர்வு இல்லாமல் ஒரு ஆயுதத் தீர்வை இலங்கை அரசாங்கம் முன் வைத்து அதற்காக கடன்கள் பெற்று பொருளாதாரத்தை நாசமாக்கி விட்டிருக்கும் காரணத்தை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன் என்றார்.

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# தார்ப்படுக்கை வீதிகளில் உலரவிடும் நெல், நஞ்சுத் தன்மைகொண்டதாக மாற்றமடைவதாக கிளிநொச்சி தொழில் நுட்ப நிறுவனம் தெரிவிப்பு

**தா**ர்ப்படுக்கை வீதிகளில் உலரவிடும் நெல் நஞ்சுத் தன்மைகொண்டவையாக மாற்றமடைவதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய அறுவடைக்கு பின்னரான தொழில் நுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 2024-02-08 அன்று மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தார்ப்படுக்கை வீதிகளில் உலரவிடும் நெல் இரசாயனத் தன்மை கொண்டவையாக மாற்றமடைவதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய அறுவடைக்கு பின்னரான தொழில் நுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மன்னார் வீதி, பரந்தன் முல்லைத்தீவு வீதி, புளியங்குளம் நெடுங்கேணி வீதியென வடக்கின் பெரும்பாலான பிரதான வீதிகளில் நெல் அறுவடை காலங்களில் நெல் உலரவிடுவது என்பது பலரின் விமர்சணத்திற்கும் சிலரின் பரிதாபத்திற்குமான விடயமாக மாறிவிட்டது.

இது தொடர்பிலே கிளிநொச்சி மாவட்ட கலந்துரையாடலில் வீதிகளில் உலரவிடும் நெல் இரசாயனத் தன்மை கொண்டவையாக மாற்றமடைவதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்ப நிறுவனம் குறிப்பிட்டமை தொடர்பிலும் அங்கே காணப்படும் நெருக்கடிகள் தொடர. பாகவும் இரணைமடு விவசாயிகள் சம்மேளண செயலாளர் மு.சிவமோகனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, விவசாயிகள் இன்று விவசாயம் புரிவதென்பது ஓர் தாய் குழந்தை பிரசவிப்பதற்கு நிகராகிவிட்டது. அந்தளவு கஸ்ர துன்பங்களைத் தாண்டியே விவசாயத்தில் ஈடுபடவேண்டிய நிலையில் போதிய விளைச்சல் இன்றி அறுவடை செய்த நெல்லைக்கூட பாதுகாப்பதற்கு அவை அதிக ஈரப்பதங்களுடன் காணப்படுகின்றது. இதனால் அவை அனைத்தையும் உடனடியாக உலரவிட வேண்டிய தேவை உள்ளது. அதுமட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்திலே காலபோகத்தில் 65 ஆயிரம் ஏக்கர் நிலம் விதைக்கபடுகின்றது இவை வெறும் 20 நாள் இடைவெளியில் அறுவடை செய்ய வேண்டும். அக் காலப்பகுதியில் அனைவரும் நெல்லை உலர விட்டே ஆக வேண்டிய கட்டாயத்தின் காரணமாக விவசாய அமைப்புக்களிடம் உள்ள காய்தளத்தில் இட வசதி இன்மையாலுமே விவசாயிகள் விதிக்கு வருகின்றனர். இருந்தபோதும் அவை போக்குவரத்திற்கு சில இடையூறாக இருப்பதனை நாம் மறுக்கவில்லை அதனால் போதிய தளவசதி ஏற்படுத்தும் வரையிலுமே இந்த நெருக்கடி காணப்படுகின்றது என்றார்.



இதேநேரம் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மாவட்ட அரச அதிபருக்கு வீதியில் நெல் உலர விடுவதனால் ஏற்படும் ஆபத்து தொடர்பில் எழுத்திலே கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்வாறு பொது அமைப்புக்கள், பிரயாணிகள், விவசாயிகள் கூறும் கருத்து தொடர்பில் கிளநொச்சி மாவட்ட அரச அதிபரான திருமதி. ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இவ் விடயம் தொடர்பில் மாவட்ட கூட்டத்தில் விவாதித்தவேளையில் அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்ப நிறுவனம், மாவட்ட விவசாய ஆராச்சி நிறுவனம் உட்பட பலரும் வீதியில் நெல் உலர விடுவதனால் ஏற்படும் அபாயத்தை எடுத்துக் கூறியதோடு நெல் இரசாயனத் தாக்கத்திற்கு உட்படுகின்றது என்பதனை தெளிவாக கூறினர். தளத்தில் 3 தினங்கள் உலரவிடவேண்டிய நெல் தார்படுக்கை வீதிகளானால் ஒரு நாளில் உலர்வதே அதிக தாக்கம்தான். தார்படுக்கை வீதிகள ஆபத்து என்பதன் காரணமாகவே மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நெல் உலரவிடும் தளங்கள் அனைத்தும் சீமேந்தினால் மட்டும் அமைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 100ற்கும் மேற்பட்ட விவசாய அமைப்புக்கள் உண்டு அதில் 80ற்கும் மேற்பட்ட அமைப்புகளிடம் உலரவிடும் தளங்கள் கைவசம் உள்ளது. அவற்றிலர ஒரே தடவையில் 70 மூடை நெல் உலரவிட முடியும். இவை தாண்டி பச்சை நெல்லாகவே பல தனியார் கொள்வனவு செய்வதோடு நெல் உலரவிடும் 3 இயந்திரங்களும் மாவட்டத்தில் உள்ளது. இதனால விவசாயிகள் தனியான இடத்தை பயன்படுத்த வேண்டுமே அன்றி வீதிகளை பயன்படுத்தக்கூடாது. இவ்வாறு வீதகளில் நெல் உலரவிட்டதன் விளைவாகவே 2023 ஆம் ஆண்டு 3 உயிர்கள் பரிதாபகரமாக இழக்கப்பட்டன.

இதேநேரம் தளம் இல்லை என விவசாயிகள் கூறமுடியாது போதாது என்பது உண்மைதான் அவற்றினையும் அடுத்து வரும் வருடங்களில் நிறைவு செய்ய முயற்சிக்கலாம். இதேநேரம் அமைத்துக்கொடுத்த தளங்களில் பல பயன்படுத்தப்படாமல் உள்ளதனையும் நாம் கண்ணுற்றுள்ளோம் என்றார்.

இதேநேரம் ஏ32 வீதி மற்றும் பரந்தன் முல்லைத்தீவு வீதியிலேயே அதிக நெல் உலர விடுவதாகவும் காலபோகத்தில் அதிக நெல் என்பதனால் தளம்போதாது எனக் கூறும் விவசாயிகள் சிறுபோகத்தில் 30 ஆயிரம் ஏக்கர் விதைக்கும்போதும் வீதிகளிலேயே உலரவிடுகின்றனர். இது விவசாயிகள் வெறுமனே தமது சுயநலத்தை மட்டுதே கருதுவதாகவே பார்க்கின்றேன் என விசுவமடு தொட்டியடியில் பேருந்து வைத்திருக்கும் சிறிரங்கன் தெரிவிக்கின்றார்.

**- நடராசா லோகதயாளன்**

# சுவாமி நித்தியானந்த பரமசிவம் அவர்கள் மீது புனையப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் குஜராத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. கைலாச இந்துக்களுக்கு கிடைத்த மாபெரும் சட்ட வெற்றி!

- சென்னையிலிருந்து செய்தியாளர் செழியன் ராஜ்



பெப்ரவரி 02, 2024 அன்று - இந்து விரோத சக்திகளால் சுவாமி நித்தியானந்த பரமசிவம் அவர்கள் மீது புனையப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் மாண்புமிகு குஜராத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இடைவிடாத துன்புறுத்தல்களுக்கு மத்தியில், இந்து மதத்தின் உச்ச மடாதிபதியான சுவாமி ஸ்ரீ நித்யானந்த பரமசிவம் மற்றும் கைலாசவாசிகள் ஆகியோர், இந்து விரோத கும்பல்களால் பொய்யாக திட்டமிடப்பட்டு புனையப்பட்ட குஜராத் வழக்கில் மற்றொரு மைல்கல் சட்ட வெற்றியைப் பெற்றிருக்கின்றனர்.

மாண்புமிகு குஜராத் உயர்நீதிமன்றம் பகவான் மீதான அனைத்து பொய் குற்றச்சாட்டுக்களையும் தள்ளுபடி செய்துள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்றம், கடத்தல், மற்றும் பிற அபத்தமான, தீங்கு விளைவிக்கும் தவறான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்து பொய் வழக்குகளை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.

சுவாமி நித்தியானந்தாவிற்கு எதிரான இந்த பொய்யான குற்றச்சாட்டுகள் கொடூரமான தாக்குதல்களுக்கு அடித்தளமாக அமைந்துவிட்டன. இந்து மதத்தின் உச்ச மடாதிபதிய பகவான் நித்தியானந்த பரமசிவமால் நிறுவப்பட்ட கைலாசத்தின் யோகினி சர்வண்யபீடம், ஒரு பெண் மடாலயம், பள்ளி மற்றும் பல்கலைக்கழகம் என்பன சட்டவிரோதமாக அழிக்கப்பட்டன. இந்த தாக்குதல்களுக்கு மத்தியில், கைலாசாவின் கன்னியாஸ்திரிகளுக்கு வாழ்வதற்கான உரிமை மற்றும் மதத்திற்கான உரிமை மறுக்கப்பட்டதுடன் உடனடியாக அவர்களது வாழ்க்கைக்கு அச்சுறுத்தல்கள் விடப்பட்டன.




இந்த பொய்யான குற்றச்சாட்டுகள் குஜராத் மற்றும் இந்தியா முழுவதும் இந்து விரோத ஊடகங்களால் பெருமளவில் பரப்பப்பட்டிருந்தன. உலகெங்கிலும் உள்ள பிற நாடுகளுக்கும் இவை விரிவடைந்து சென்றன. பகவான் மற்றும் கைலாசாவுக்கு எதிரான கோபம், வெறுப்பு உணர்வுகள் மற்றும் பழிவாங்கல்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, அதன் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு சரிசெய்ய முடியாத சேதத்தை ஏற்படுத்தியதுடன் கைலாசா மற்ற நாடுகளுக்கும் சமூகங்களுக்கும் வழங்கிய மனிதாபிமான உதவிகளை கூட நிறுத்துவதற்கு வழிவகுத்தது.

குஜராத்தில் கைலாசாவின் முக்கிய சுற்றுச்சூழல் அமைப்பான கைலாசாவின் யோகினி சர்வன்யபீடத்தின் மையமாக இருந்த இந்துப்பெண்ணியம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் ஆகியவற்றின் மறுமலர்ச்சியைத் தடுக்கும் நோக்கத்துடன் கொண்ட இந்த தாக்குதல்கள் ஆழ்ந்த இனவெறி கொண்டவை. கைலாசாவின் கன்னியாஸ்திரிகளின் பாதுகாப்பு அறிக்கைகள், காவல்துறைக்கு எழுதப்பட்ட கடிதங்கள், காவல் நிலையங்களில் வழங்கப்பட்ட வாய்மொழி அறிவிப்புகள், நீதிமன்றங்களின் அறிக்கைகள், இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முகாமைகளில் சமர்ப்பிக்கப்பட்ட பிரமாணப் பத்திரங்கள் மற்றும் சமூக ஊடக சான்றுகள் ஆகியவை அனைத்தும் ஊடகங்களால் மறைக்கப்பட்டு இருந்தன.

இந்த ஆண்டு சமீபத்தில், இந்த வெற்றிக்கு முன்னதாக கைலாசா இந்துக்களுக்கு மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஏற்பட்டது, ஏனெனில் ராமநகராவின் இந்திய நீதிமன்றம் பகவான் மற்றும் கைலாசாவுக்கு எதிராக இந்து விரோத சக்திகளால் இழைக்கப்பட்ட கற்பழிப்பு, மிரட்டி பணம் பறித்தல் மற்றும் கிரிமினல் மிரட்டல் போன்ற கொடூரமான குற்றங்களை அறிந்துள்ளது.

கைலாசாவிற்கு எதிரான முக்கிய சதிகாரர்களில் ஒருவரான தொடர் கற்பழிப்பாளர் லெனின் கருப்பன் மீது பாலியல் பலாத்காரம், மிரட்டி பணம் பறித்தல் மற்றும் கிரிமினல் நடவடிக்கைகள் ஆகிய குற்றச்சாட்டுக்களை நீதிமன்றம் பதிவு செய்துள்ளது. மேலும் அவர் மீதும், தீங்கிழைக்கும் ஆழமான போலி வீடியோவின் இணை உருவாக்குநர்கள், மற்றும் 12 மில்லியன் அமெரிக்க டாலருக்கு சமமான 100 கோடி ரூபாய் மிரட்டி பணம் பறிக்கும் முயற்சியில் முக்கிய சதிகாரர்களான வழக்கறிஞர் ஸ்ரீதர் மீதும் உடனடியாக நேரடி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், இந்த தீங்கு விளைவிக்கும் ஆழமான போலிப் பரவலைத் தடுக்க யூரியூப் நடவடிக்கை எடுத்தது மற்றும் தீங்கிழைக்கும், ஆபாசமான ஆழமான போலி உள்ளடக்கத்தைக் கொண்ட இதுபோன்ற 110 க்கும் மேற்பட்ட வீடியோக்களைத் தடுத்தது, இது மொத்தம் 80 மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளை பல சேனல்களில் மொத்தம் 160 மில்லியனுக்கும் அதிகமான சந்தாதாரர்களைப் பெற்றது. யூரியூப் இந்த ஆழமான போலிகளின் தீங்கிழைக்கும் தன்மையை அங்கீகரித்துள்ளது மற்றும் ஒரு புவியியல் தடையைத் தவிர, அதன் நடவடிக்கைகளை சந்தேகத்திற்கு இடமின்றி நியாயப்படுத்தும் கடுமையான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

சுவாமி நித்தியானந்த பரமசிவம் அவர்களின் மறுக்க முடியாத அப்பாவித்தனம், கைலாசவாசிகளின் நோக்கம், இந்துக்களுக்கு எதிராக திட்டமிடப்பட்ட இடைவிடாத துன்புறுத்தல்கள் ஆகியவை தற்பொழுது வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. சட்ட நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் ஏஜென்சிகள் போன்றவற்றிலிருந்து மேலும் மேலும் வெற்றிகள், அங்கீகாரங்கள், ஆதரவுகள் என்பன கைலாசாவிற்கு தினம்தினம் குவிந்த வண்ணமே இருக்கின்றன.

---

## கடந்தவையும் கடப்பவையும்

(88)

திறந்தவெளிப் பெரும் பரப்பு அது
பரந்த வெண் மணல் விரிப்பு - அங்கு

உயர்ந்த நிற்கும் கோபுரமும் - அருகில்
அடர்ந்து நிற்கும் மரங்களும் அழகுசெய்ய

மூர்த்தி தல தீர்த்தச் சிறப்போடு - மிக
நேர்த்தியாக அமைந்திருக்கும் வல்லிபுரஆழ்வார் ஆலயம்

பிள்ளையாரொடு நாகதம்பிரான் நாச்சிமார் - என
நல்ல தெய்வங்களின் நடுவினிலே சக்கரத்தாழ்வார்

நட்டநடுவில் வட்டவடிவில் மூலவராய் அமர்ந்திருந்து
கேட்டவர்க்கு கேட்டவரம் அருளுகிறார்

ஐந்துதலை நாகம் குடைபிடிக்க பாற்கடலில்
தொந்தரவு ஏதுமின்றி பள்ளிகொள்ளும் பரந்தாமன் - இதுபோல

எத்தனையோ அழகுச்சிலைகளும் அணிசெய்ய
அத்தனையும் மாயவனின் கதைசொல்ல

பார்ப்பவரின் மனங்களும் குளிர்ந்து கொள்ள அமைந்ததுதான்
பார்த்தசாரதியின் திருக்கோவில் - இங்கு

நந்த கோபாலன் இவனுக்கே சொந்தமான நாமமும்தான்
வேறெந்த கோவிலுக்கும் இல்லாத தனிச்சிறப்பு

வட்டவடிவக் கல்லாலே கட்டிய தொட்டிக்குள்
அள்ள அள்ள குறையாத நாமம் இங்கு

வெண்சாம்பல் களிபோல அது இருக்கும் - நெற்றியிலே
கண்ணனை நினைத்தபடி ஒரு இழுவை கீழிருந்து மேலாக - பின்

வெள்ளை வெளேரென அது தெரியும்
"என்னவொரு வருத்தம் வந்தபோதும்

கண்ணனது நாமம் ஒன்று போதும்"
என்பவரும் இருந்தார் அன்றைய நாட்களில் - அங்கு

ஞாயிறு தோறும் திருவிழாக் கோலம்
வாகனம், குறைவே ஆனாலும்

வீதிகள் நிறைந்த மக்கள் கூட்டம் - யாருக்கும்
களைக்காத மிதிவண்டி ஓட்டம் - அங்கு

நேத்திக்கடன் என்றுவிட்டால் பொங்கல்தான் பெருமளவில் - அன்று
காத்திரமாய் நல்ல மடங்கள் அங்கிருக்கும்

ஆலயத்தின் அருகில் மடபங்கள் அமைந்திருக்க
ஆலமர நிழல்கள் குடைபிடிக்கும் குளிர்ச்சியாக

ஆண்டியார் மடமும் அப்படித்தான் - மிக
நீண்டகாலம் அந்த மடம் அங்கிருக்க

குளிர்ச்சியான அம் மடத்திற்கு அருகினிலே - மனதிற்கு
கிளர்ச்சி ஊட்டும் சின்னக் கிணறு ஒன்றும்

வட்டவடிவ குட்டிக்கிணறு - அதை
சுற்றிவர சுவரும் உண்டு உயரமாக

எந்த மடம் இருந்தாலும் அந்த மடம் வேணுமென்று
சின்னவர்கள் விரும்பிய காலமது

ஆண்டு பலகடந்து போச்சு ஆனாலும்
இன்றுவரை தொட்டதில்லை வேறெந்தத் துலாவிலும்

மீண்டும் இப்போ போனபோது
வேண்டும் அந்தத் தருணம் என எண்ணித்தான்

இறங்குகிறோம் ......

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# அமெரிக்க காங்கிரஸ் முற்போக்கு இளம் அரசியல் தலைவர்களான "சமர் அலி" – "லிகான் ஓமா" ஆகிய இருவருடனும் தமிழ்த் தேசிய முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்திப்பு

சமர் அலி / லிகான் ஓமா





காங்கிரஸ் உறுப்பினர்களான சமர் அலி - லிகான் ஓமா ஆகிய இருவரும் அமெரிக்காவின் காங்கிரஸ் பாராளுமன்றத்தில் மிகவும் முற்போக்குவாத இளம் அரசியல் தலைவர்களாவர். இளைஞர்கள் மட்டத்தில் கணிசமாக ஆதரவு பெற்றவர்கள். மனித உரிமைகள் தொடர்பாகவும் - சிறுபான்மை மக்கள் அல்லது இனங்கள் வெள்ளையர்களால் இனவாதக் கோணத்தில பாதிக்கப்படுகின்ற போது அக்கறை செலுத்துபவர்கள். சர்வதேச மட்டத்திலும் ஏனைய இனங்கள் அல்லது ஏனைய நாடுகளுக்கு தங்களது நலன்கள் சார்ந்து மட்டும் அமெரிக்க அரசு முடிவெடுத்து அந்த நாடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்ற இடங்களில் துணிந்து குரல் எழுப்புகின்ற இளம் அரசியல் தலைவர்களாக இரு பெண் காங்கிரஸ் உறுப்பினர்களும் உள்ளனர்.

தமிழர்களுடைய விவகாரங்களிலும் இருவரும் அக்கறைகாட்டி வருபவர்கள் காங்கிரஸில் தமிழ் மக்கள் விவகாரங்கள் தொடர்பான தீர்மானங்கள் நிறைவற்றப்பட்ட போது இருவரது ஆதரவும் பெறக்கூடியதாக இருந்திருக்கின்றது.

குறிப்பாக காங்கிரஸ் உறுப்பினரான பெண்மணி "சமர் லீ" கணிசமான இடங்களில் தமிழ் மக்கள் சார்பில் குரல்கொடுத்து வருகின்றார். தன்னுடைய பேச்சுக்களிலும் அதேநேரம் தன்னுடைய எழுத்துக்கள் மற்றும் - கடிதங்கள் மூலமாக தமிழ் மக்களுக்கு நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள் - போர்க் குற்றங்கள் போன்ற பல விடயங்கள் சம்பந்தமாக குரல் எழுப்பி வருகின்றவராவார். மருதங்கேணி விவகாரம் தொடர்பாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்ட போது தன்னுடைய கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்தவர் என்பதுடன் தன்னுடைய பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்களுடனும் மிக நெருங்கிய தொடர்பினை வைத்திருப்பவர்.

அதேவேளை - "லிகான் ஓமர்" மிகவும் முற்போக்குவாத அரசியல்வாதி. அமெரிக்காவில் இருக்கக் கூடிய வெளிவிவகார கொள்கை விசேடமாக மத்திய கிழக்கு தொடர்பாக இருக்கக் கூடிய வெளிவிவகாரக் கொள்கைக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து அமெரிக்காவுக்குள்ளேயே தனக்கு எதிரான கருத்துக்கள் வந்தாலும் கூட தனது மனச்சாட்சிக்கு சரியாக படுவதற்கு துணிந்து நிற்கின்ற ஒரு பெண்மணியாக புகழ்பெற்ற அம்மையார்.

டொன் டேவிஸ்

"டொண் டேவிஸ்" தமிழர் விவகாரங்களில் கணிசமான அக்கறை செலுத்திவருபவர். டொண் டேவிஸ் அண்மையில் காங்கிரஸ் சபையில் பேசியபொழுது "தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும். அதுதான் தீர்வுக்கு வழிவகுக்கக் கூடிய ஒரேயொரு விடயம்" என்ற அடிப்படையில் பேசியிருந்தமையானது மிகமிக முக்கியமான விடயமாகும். அவரது பங்களிப்பு தமிழ்த் தேசத்துக்கு மிகமிக முக்கியமானதாகும். அமெரிக்க சரித்திரத்திலேயே ஒரு மிக முக்கியமான கொள்கையை நிலைநாட்டி ஈழத் தமிழர்களுடைய உரிமை சார்ந்த குரலை எழுப்பியிருந்தவராவார். அத்தோடு தமிழ் மக்களுடைய பொறுப்புக் கூறலுக்கு சர்வதேச குற்றவியில் விசாரணை மட்டும் தான் பொருத்தமானது என்ற விடயத்திலும் மிகத் தீவிரமாக உழைக்க முன்வந்திருப்பராவார். ஏதிர்காலத்தில் காங்கிரஸ் சபையில் இது தொடர்வான தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இவரது பங்களிப்பு மிகமிக அவசியமானதாகும்.

மூன்று அமெரிக்க காங்கிஸ் உறுப்பினர்களிடமும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்திய விடயங்கள் குறித்து அவர் தெரிவிக்கையில்:

இன்றைய பூகோள அரசியல் காரணமாக இலங்கைத் தீவை மையப்படுத்திய போட்டித்தன்மையிலே சீனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பார்வையிலே அமெரிக்காவுடைய நிர்வாகம் இயங்குவதாக நாங்கள் கருதுகின்றோம். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க மேற்கத்தைய நாடுகளுக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் சார்பான ஒரு நபராக கருதப்படுகின்றதனாலும் இந்த வருடம் ஒரு தேர்தல் நடைபெறவுள்ள காரணத்தினாலும் ரணில் விக்கிரமசிங்க இந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி கடுமையான மனித உரிமை மீறல்கள் - சட்டத்தின் ஆட்சி போன்ற ஜனநாயகத்துக்கு முக்கியமான தூண்களாக இருக்கக் கூடிய கொள்கைகள் அனைத்தையும் மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் மிக மோசமான கொடூரமான சட்டங்களையெல்லாம் கொண்டுவந்து நிறைவேற்றுகின்றார்.

அந்த வகையில் நிகழ்நிலைக் காப்பு சட்டம் - வரவிருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் - அதே போன்று நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறலையும் நிரந்தரமாக முடக்குவதற்குரிய உள்ளூர் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இனிவரப்போகும் உண்மை மற்றும் நல்லிணக்கம் குறித்த சட்ட விடயங்களையும் அவரச அவசரமாக கொண்டு வந்து நிறைவேற்றி - தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை அதிகரித்து - சிங்கள பௌத்த இனவாத சக்திகள் மட்டத்தில் தன்னுடைய செல்வாக்கை வளர்த்தெடுத்து - ராஜபக்ஸ தரப்புக்கு கடந்த காலங்களிலே வாக்களித்த மக்களுடைய வாக்கு வங்கியை முழுமையாக கைப்பற்றி ஆட்சிக்கு வருவதற்கு முனைப்பு காட்டி வருகின்றார்.

பூகோள அரசியல் காரணங்களுக்காக ரணில் விக்கிரமசிங்க மேற்கு சார்ந்த இந்தியா சார்ந்த ஒரு விசுவாசியாக இருப்பதால் - அமெரிக்க இராஜாங்க திணைக்களம் - மற்றும் அரசு என்பன ரணில் விக்கிரமசிங்க பாரதூரமான மனித உரிமை மீறல்கள் - ஜனநாயக விரோத செயற்பாடுகளை செய்கின்ற போதும். பெருமளவில் அதனை எதிர்க்காமல் கடமைக்கு மட்டும் கருத்துக்களை தெரிவிப்பதுடன் அமைதியாக இருக்கின்ற தன்மை காணப்படுகின்றது.

ஆகவே இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு செனட் சபையில் இருக்கக் கூடிய உறுப்பினர்களும் கீழ் சபையில் இருக்கக் கூடிய காங்கிரஸ் உறுப்பினர்களும் தமது குரலை எழுப்பி அழுத்தங்களை உருவாக்கவேண்டும். அவ்வாறன்றி இந்த நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவது கடினமாக இருக்கும். அது மட்டுமல்லாமல் - இன்று பொருளாதார ரீதியாக முழுமையாக இலங்கை மேற்கத்தைய நாடுகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை இருக்கும் போது - அதுவும் விசேடமாக முதலீடுகள் எனப் பார்க்கின்றபோது - மேற்கத்தைய நாடுகளின் ஒத்துழைப்பில்லாமல் அந்த முதலீடுகள் வரப்போவதில்லை என்கின்ற ஒரு நிலையில் - உதவி செய்வதற்கான நிபந்தனைகளைப் விதித்து பேரம்பேசக்கூடிய நிலைமை மேற்கு நாடுகளுக்கு இருக்கும் நிலையில் - அதனைச் செய்யாமல் செயற்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுக்கின்றது.

ஆகவே இப்படிப்பட்ட விடயங்களுக்கு அமெரிக்காவில் இருக்கக் கூடிய நிர்வாகத்துக்கு முற்போக்குவாத சிந்தனையோடு செயற்படுகின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் என்ற வகையில் இதில் கூடிய அக்கறை காட்ட வேண்டும். என்பதுடன் - மிக அவசரமாக செய்யவேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்தியிருந்தோம்.

அத்தோடு - எதிர்காலத்தில் தமிழ் மக்களுடைய - தமிழ்த் தேசத்தினுமைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அந்த நிலைப்பாட்டை பகிரங்கமாக வலியுறுத்தி அமெரிக்க அரசு அங்கீகரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - பொறுப்புக் கூறல் தொடர்பாகவும் முழுமையான சர்வதேச விசாரணையை நிலை நாட்டுவதற்கு நேரடியாக குற்றவியல் நீதிமன்றம் போன்ற விடயங்களை வலியுறுத்தி பொறுப்புக்கூறல் சம்பந்தமாக மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அவர்கள் தீவிரமாக உழைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருந்தோம். என்றும் தெரிவித்தார்.






மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1086

## கைலாசநாதர் திருக்கோயில்
## (நல்லூர் சிவன்கோயில்)
## நல்லூர், யாழ்ப்பாணம்

*" அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்*
*அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி*
*வருந்துணையும் சுற்றமும் பற்றும்விட்டு*
*வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும்*
*பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்*
*பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்*
*பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்*
*பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. "*

இவ்வாலயத்திலே சந்தான கோபாலர் வீரபத்ரர், சேஷத்ரபாலர், சண்டேசுவரர், மகிசாசுரமர்த்தனி, விநாயகர் ஆகிய மூர்த்தங்களும் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றோடு இருகைகளையுடைய தேவிகள், துர்க்கை, தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர் ஆகிய மூர்த்திகளும், நின்ற நிலையிலுள்ள சண்முகரும், பிரதி'டை செய்யப்பட்டுள்ளனர். அம்பாளின் கோ'டங்களில் இரு கைகளையுடைய தேவிகளும், சிவனின் கோ'டங்களில் துர்க்கை, லிங்கோற்பவர், தட்சிணாமூர்த்தி ஆகிய மூர்த்தங்களும் நிறுவப்பட்டுள்ளன.

இந்துமதம் வெறும் கிரியை வழிபாட்டோடு மட்டும் அமைந்த மதமல்ல. இம்மதம் வாழ்வுநெறிக்கேற்ற பண்பாடுகளையும், கலாச்சாரங்களையும் அதுசார்ந்த கலைகளையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாலயம் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பவற்றினை எடுத்தியம்பியுள்ள, கலைமரபிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இவ்வாலயத்திலே காணப்படுகின்ற தெய்வாம்சம் மிக்க சிற்பங்கள், சிற்பக் கலைக்கோர் எடுத்துக்காட்டாக கலையம்சத்துடன் மிளிர்கின்றன. மகாலட்சுமி துர்க்கா பரமேஸ்வரி, மீனாட்சிஅம்மன் திருக்கல்யாண வைபவம், பார்வதி திருக்கல்யாண வைபவம், ஏன்பன புராண வரலாறுகளை எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றன. அத்தோடு இங்கு தீட்டப்பட்டுள்ள ஓவிங்கள் கண்ணையும், கருத்தையும் கவர்வனவாகக் காட்சியளிக்கின்றன.

இவ்வாலயத்தின் வருடாந்த விழாக்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, பத்துத் தினங்கள் கொண்டதாக இடம்பெற்று வந்துள்ளது. சிவன் புரிந்த அட்டவீரச் செயல்களை புராணங்கள் விரித்துரைக்கின்றன. ஆணவ வசப்பட்ட அரக்கர்களை அழித்து, அவர்களுக்கு நல்வழியூட்டிய சம்பவங்களை, சிவனது அட்டவீரட்டானம் குறிக்கின்றது. இவற்றின் அடிப்படையிலேயே இவ்வாலய மகோற்சவங்கள் நடைபெறும். ஆயினும் இவை காலப்போக்கில் அருகிவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. முழுமுதற் கடவுளாகிய சிவன், ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு பல திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார். அவ்வாறே தர்மத்தைக்காப்பாற்றி நீதிநெறியை நிலைநாட்டி, தன்னையே சரணம் என்றடைந்த அடியவாக்கு அருள்புரியும் வகையில் எழுந்த புராணக்கதைகள் ஏராளம்.

இக்கோயிலில் நடைபெறும் ஏழாந்திருவிழாவாகிய யமசங்காரத் திருவிழா, சிவபக்தராகிய மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்தமையை எடுத்தக்காட்டுவதாகக் காணப்படுகின்றது. இவ்விழா தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இயம சங்காரத்திருவிழா வேறெங்கும் நடைபெறாத முறையில், மிக விமரிசையாக இக்கோயிலிலே கொண்டாடப்படுகின்றது. ஐப்பசி மாத் கடைசி வெள்ளிக்கிழமையன்று இயமசங்காரம் நடைபெறும். இவ்விழா கந்தனுக்குரிய சூரன்போர் எனப்படும் சூரசம்மாரத்தை ஒத்ததாகவே விளங்குகின்றது. "என்றும் பதினாறு வயது" என்ற வரத்தைப் பெற்ற மார்க்கண்டேயருக்காக இயம சங்காரத்தை, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் நிழ்த்தினார் என்ற புராணக்கதையின் வெளிப்பாடாக, இந்நிகழ்வு தொன்றுதொட்டு சிறப்பாக நடைபெறுகின்றது.

யமசங்காரத்தில் இடம்பெறும் எருமைக்கடாவுடன் கூடிய யமதர்மனின் வாகனமும், இக்கோயிலிலே காணப்படுகின்றது. இச்சூழலிலே வாழுகின்ற மக்கள் மட்டுமன்றி, ஈழத்தின் பலபாகங்களில் இருந்தும் மக்கள், இவ்வாலய மகோற்சவத்தினைக் கண்ணாரக்காணக் கூடுவர். தற்காலத்தில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களும், இவ்வாலய திருவிழாக்களைக் காண வருவதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது.

பிரபல வர்த்தகராக விளங்கிய எஸ்.வி. முருகேசு என்ற அடியவரே, இவ்வாலயத்தின் தேர் உருவாக தனியொருவராகப் பொருளுதவி செய்துள்ளார். நீர்வேலி சீனிவாசகம் ஆச்சாரியார் அவர்கள் கைவண்ணத்திலும், எண்ணத்திலும் உதித்த நல்லூர் சிவன்கோயில் ரதம், கலையம்சத்துடன் மிளிர்கின்றது. மகோற்சவநாட்களிலும், ஏனைய உற்சவநாட்களிலும் சுவாமி எழுந்தருளும் வாகனங்களாக, இடபவாகனம், அன்னவாகனம், குதிரைவாகனம், பத்மம், காமதேனு, சர்ப்பம் போன்றவையும் காணப்படுகின்றன.

கைலாசநாதர் கோயில் என்றழைக்கப்படும் சிவன்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை கைலாசநாதர் என்றும், அம்பாளை கமலாம்பிகை என்றும் அழைப்பர். கைலாசநாதருக்குச் சாத்தப்படும் வெள்ளியினாலான பஞ்சமுக ஆபரணம், கௌரிசங்கம், ருத்ராட்சமாலை என்பன எழில்மிக்கவை. அவ்வாறே இவ்வாலயத்திலே எழுந்தருளியுள்ள கமலாம்பிகை அம்பாளுக்கு அணிவிக்கப்படும் திருஅங்கி, திருமுடி, திருக்காதுகள், திருக்கைகள் என்பனவும், சிங்கமுகக் காப்பும் கலையம்சம் கொண்டனவாகத் திகழ்கின்றன.

தொடரும்...




OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

## 09-02-2024 வெள்ளி தொடக்கம் 15-02-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவுகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்கள் ஏற்றம் பெறும். பாதிப்புகள் அகலும். பிரார்த்தனையால் பலன் உண்டு. தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை வளரும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். போட்டிகள் உருவாகி மறையும். பயணம் தவிர்ப்பது நல்லது. பொருளாதார ஏற்றம் பெறும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடவும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பங்குச்சந்தை லாபம் கிட்டும். பணிவான பேச்சுக்கள் தேவை. இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பித்ருக்கள் சாபம் நீங்கும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு உயரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,4*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,C*





**ரிஷபம்:** சச்சரவுகள் அகலும் வாரம். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். குலதெய்வ வழிபாடு மேன்மை தரும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பண நடமாட்டம் கூடும். செய்த்தொழில் சிறப்படையும். இனிப்பான செய்திகள் வரும். நீண்ட நாளைய நோய் விலகும். வெளிநாட்டு தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். பணப்புழக்கம் சரளமாகும். கடன்சுமை குறையும். நலமே விளையும் இனிய வாரமாகும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். புதிய வேலை முயற்சி பலிதமாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்பு தொழில் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பாராட்டுக்கள் கூடும். கடன் வி'யத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. எண்ணங்கள் பலிதமாகும். தாய் வழி தகராறுகள் குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். கடன் சுமை குறையும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். பேச்சில் நிதானம் தேவை. பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1*
*அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,H*




**மிதுனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தால் கவனம் தேவை. வம்பு தும்புகள் ஒழியும். வெளிவாட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடம் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்யம் அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் பெரும் லாபம் தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மாணவர்கள் உற்சாகம் கூடும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K*




**கடகம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். கையிருப்புகள் கரையும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். புது முயற்சிகள் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. குடும்ப ஆரோக்யம் சீராகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு கவனம் தேவை. தொழிலாளர்களுக்கு உயர்வுகள் கிடைக்கும். திருப்புமுனையான காலம். தங்க நகைகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. செல்வாக்கு உயரும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்ல செய்திகள் நாடி வரும். முயற்சிகள் வளர்ச்சி அடையும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். புகழ்ச்சி அதிகரிக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பொறுப்புகள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதம் உண்டாகும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பணவரவு உண்டு. அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். உற்சாகம் அதிகரிக்கும். உயர்வுகள் தாமதமாகும். தன சேர்க்கை உண்டு. மனநிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணியாட்களிடம் கவனம் தேவை.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1*
*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,T*



xU kdpjid ahu; iftpl;lhYk; Md;kPfk;
iftplhJ! vd;w cWjpNahL cq;fs;
'uh[Nahfk;"
Dr. K. RAM.Ph.D (USA)
njhlu;Gf;F: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** வெற்றிச் செய்தியை தொட்டு ரசிக்கும் வாரம். கலை ஆர்வம் பெருகும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. செல்வாக்கு உயரும். முன் கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். குழப்பங்கள் நீங்கும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல் திறமை அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிகள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். ஆசைகள் நிறைவேறும். பணியில் இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். விரோதங்கள் விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தெம்பும்ரூபவ் தைரியமும் கூடும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: காட்டேரி முனிசாமி, அதிர்ஷ்ட எண்: 4,5,7,1*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,L*




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும். களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. சோம்பல் அதிகரிக்கும். பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. ஆலய தரிசனம் அமைதி தரும். வெளியூர் பயணம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடிவரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியால் செலவுகள் அதிகரிக்கும். வீண் பழி அகலும். பொன், பொருள் சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்தொழிலில் நிலை உயரும். விளையாட்டுத் துறையால் வெற்றிக் கிட்டும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தகத் தொழில் லாபம் தரும். பயணம் பலன் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: நவகிரஹம், அதிர்ஷ்ட எண்: 8,4,5,1*
*அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Q*




**துலாம்:** வகையான வாழ்வும் முறையாக கிடைக்கும் வாரம். விரயங்கள் அதிகரிக்கும். பணவரவு கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். தடைகள் விலகும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. ஞாபகத்திறன் அதிகரிக்கும். தனலாபம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமை மிக்க காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கக் கூடிய காலம். வழக்குகள் சாதகமாகும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வாய் பேச்சில் நிதானம் தேவை. வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். பொன்னான காலம். சுபச்செலவு அதிகரிக்கும். சாதகமான வாய்ப்பு அமையும். குழப்பங்கள் அகலும். முன்கோபம் தவிர்க்கவும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். செயல்களில் கவனம் தேவை. பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். முற்போக்கு சிந்தனை வரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8*
*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E*




**விருச்சிகம்:** புகழும், பொருளும் பெருகும் வாரம். வழக்குகளில் வெற்றி உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வயிற்று உபாதைகளும் உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். நன்மைகள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. குடும்ப குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை நீங்கும். வாகன மாற்றம் ஏற்படும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. தனம் சேரும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். பணத்தட்டுப்பாடு நீங்கும். குடும்ப மேன்மை உண்டாகும். உடல்சோர்வு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். ஆக்கம் அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைகொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். மின்சாரத்தில் கவனம் தேவை. புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். ஆடம்பர நாட்டம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். இனிய தகவல் வந்து சேரும். முயற்சிகள் பலிதமாகும். வெளிநாட்டு பயணம் ஏற்படும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உறவுகளால் மதிப்பு கூடும்.

**(தொடர்ச்சி 21 பக்கம்)**

## இவ்வார ராசி பலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விக்ரஹ விநாயகர், அதிர்ஷ்ட எண்: 3,5,6,7
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,B




**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். வாழ்த்துக்கள் கிட்டும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மனநிம்மதி கூடும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புது முயற்சிகள் பலன் தரும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினரிடம் அனுசரிப்பு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். திருமண முயற்சி பலன் தரும். தொழில் வாய்ப்புக்கள் பெருகும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாய கோரிக்கைகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. லஷ்மி கடாட்ஷம் பெருகும். பண நடமாட்டம் உண்டு. உழைப்பிற்காக பலன் கிடைக்கும். நீண்ட நாள் நோய் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F




**மகரம்:** பொன்னும், பொருளும் சேரும் வாரம். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். செய்த்தொழில் சிறப்படையும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். செய்த்தொழில் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பணவரவு திருப்தி தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவு போகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுபடும். செலவுகள் அதிகமாகும். உடல்நிலையில் கவனம் தேவை. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஆண்டாள் பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E




**கும்பம்:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். பழைய கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். குடும்ப பாசம் கூடும். தொழில் வளம் பெருகும். திட்டம் வெற்றி பெறும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோ தைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. கவனமுடன் செயல்பட வேண்டும். பணவரவு உயரும். பொன் பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். குடும்ப வளம் கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குதூகலம் கூடும். பழைய கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பதவி வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. பெண்களுக்கு யோகம் கூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வ நம்பிக்கை உண்டாகும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கை கூடும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். வரவுகள் மிகுதியாகும். விரோதங்கள் விலகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். வாய்ப்புக்கள் பெருகும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். தாய் வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். காதல் கசக்கும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,S




**மீனம்:** ஆளுமையான செயல்பாடுகள் அரங்கேறும் வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. இரும்புத் தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் சரளமாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மனமகிழ்ச்சி கூடும். கௌரவமான காலம். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் உண்டாகும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு உருவாகும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். ஆதாயம் பெருகும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். வியாபாரம் விருத்தியாகும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். புதிய முயற்சிகளை தள்ளி போடவும். கமிஷன் தொழில் லாபம் தரும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். சாதகமான வாய்ப்பு உருவாகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. புண்ணியம் சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியவர்களின் ஆலோசனை பலன் தரும். பெருமைகள் சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C

# மாணவர்கள்மீதான தாக்குதல்கள் இலங்கை அரசின் கோரமுகத்தை அம்பலப்படுத்துகின்றது

## நாடு கடந்த தமிழீழ அரசின் கனடா உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி கண்டனம்





பெப்ரவரி 4, 2024

இலங்கையிதன் சுதந்திரதினத்தன்று கிளிநொச்சியில் அறவழியில் போராடிய மாணவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள்மீது இலங்கை அரசின் காவல்துறை மேற்கொண்ட அராஜகமான தாக்குதல் இலங்கை அரசின் கோரமுகத்தை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது. என கனடாவிலிருந்து நாடு கடந்த அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர் நிமால் விநாயகமூர்த்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

### புலம்பெயர்தேசமாக கண்டனம்

ஸ்ரீலங்காவின் சுதந்திரதினத்தை புறக்கணிக்கும் விதமாகவும் அந் நாளை கரிநாளாக பிரகடனப்படுத்தியும் அமைதி வழியில் பேரணி சென்ற அரசியல் தலைவர்கள், மாணவர்கள், மக்கள்மீது மிகவும் கொடூரமான முறையில் ஸ்ரீலங்கா காவல்துறையினர் தாக்குதல் நடாத்தியுள்ளமை கண்டு புலம்பெயர் தேசமாக கடும் கண்டங்களை வெளியிடுகின்றோம்.

ஸ்ரீலங்கா அரசு ஒரு ஜனநாயக அரசென்றால், ஸ்ரீலங்கா நாடு ஒரு ஜனநாயக நாடென்றால் இப்படியான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிராது. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்மீது கண்ணீர் குண்டு பிரயோகம் மேற்கொண்டு, நீர்தாரை தாக்குதலையும் தொடுத்திருந்ததுடன், அவர்கள்மீது கடுமையான தாக்குதல்களையும் ஸ்ரீலங்கா காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

### மக்கள் பிரதிநிதிகள்மீதும் அராஜகம்

இதேவேளை இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்மீதும் தாக்குதல்கள் நடந்துள்ளன. அத்துடன் மதிப்புக்குரியவர்களானபாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மக்கள்மீதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மீதும் தாக்கி, தனது கோர முகத்தை இலங்கை அரசு வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் சுதந்திரதினத்தின்போது தமிழர்களுக்கு சுதந்திரம் இல்லை என்பதையும் அவர்கள்மீது அடக்குமுறையும் ஒடுக்குமுறையையும் மேற்கொண்டதன் வாயிலாகவும் இந் நாளை கரிநாள் ஆக்கியுள்ளது ஸ்ரீலங்கா அரசு. இதனை பன்னாட்டு சமூகம் கண்டிப்பதுடன் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதி குறித்தும் சிந்திக்க வேண்டும்.

### பொருளாதாரத்தடை வேண்டும்

இதேவேளை, ஸ்ரீலங்கா காவல்துறையினர் பெருமளவில் கிளிநொச்சியில் குவிக்கப்பட்டு, பாரிய அடக்குமுறை நிகழ்த்தப்பட்டுள்ளது. இதுவே பாரிய பொருளாதார நெருக்கடியில் உள்ள ஸ்ரீலங்கா தமிழர்களை ஒடுக்குவதில் பாரிய மனித, பொருளாதார செலவுகளை செய்வதற்கும் இத்தாக்குதல் சிறந்த எடுத்துக்காட்டு.

எனவே ஸ்ரீலங்காவுக்கு பொருளாதார நன்மைகள் செய்யும் சர்வதேச நிறுவனங்களும் அரசுகளும் இதனைக் கருத்தில் கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றேன்.

தமிழரின் தலைவிதி தமிழர் கையில்.

நிமால் விநாயகமூர்த்தி
நாடுகடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர், கனடா

---

# Rameshwaram International Film Festival வழங்கிய "GOLDEN SHELL AWARDS" பெற்றது "செந்தீ" குறும் திரைப்படம்




ஈழத்து திரைப்பட வரலாற்றில் வெற்றி படங்களின் வரிசையில் "செந்தீ" குறும் திரைப்படம் Rameshwaram International Film Festival வழங்கிய 'GOLDEN SHELL AWARDS" பெற்று கொண்டது. கதை, வசனம், இயக்கம், பாடல், தயாரிப்பு அனைத்திற்கும் கனடிய வர்த்தக கைநூலான "தமிழன் வழிகாட்டி" வெளியீட்டாளர் செந்திலாதன் "செந்திஜ" உரியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றி பணியாற்றிய அனைவருக்கும் சொந்தம் என தயாரிப்பாளர் கூறியுள்ளார். நீங்களும் "செந்தீ" குறும் திரைப்படத்தினை பார்க்க YouTube Channel - Tamilsguide senthi இற்குச் செல்லுங்கள்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடிய வோட்டர்லூ வட்டாரத்தில் ஸ்ரீ முருகன் இந்துக் கோவில் திறப்பு விழா





வோட்டர்லூ வட்டாரத்தில் ஸ்ரீ முருகன் இந்துக் கோயில் திறப்பு விழா நனவாகியது. கடந்த ஜனவரி 26, 2024 வெள்ளிக்கிழமை “தைப்பூச திருநாளில்” கிச்சனரில் உள்ள “டூன் சமூக மையத்தில்” நடைபெற்ற இந்துக் கோவில் அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

அனைத்து தமிழ் பக்தர்களையும் ஒன்றிணைக்கும் எண்ணம் 2002 ஆம் ஆண்டில் வோட்டர்லூ மக்கள் மனதில் உருவானது. அதைத் தொடர்ந்து சிறிய அளவிலான இந்து திருவிழாக்கள் மற்றும் மாதாந்த பஜனைகள், விளக்கு பூஜை, திருப்புகழ் போன்றவை இந்தப் பகுதியில் வாழும் மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயக்குமார் குருக்கள் அவர்களின் தலைமையிலான சிவாச்சாரிகளின் மந்திரங்கள் ஒலிக்க பூஜை ஆராதனைகளுடன் கணபதி சிலை மற்றும் முருகனின் வேல் திறந்து வைக்கப்பட்டது. இந்த சிலைகள் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு, கென் ஸ்ரீசங்கர் குடும்பத்தினரால் இந்த தெய்வங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

ஆலயசபைத் தலைவர் திரு. சிவகுமார் சோமசுந்தரம் அவர்கள் தனது உரையில், இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் ஆதரவு நிதி மற்றும் தார்மீக பங்களிப்புகளுடன் கோவிலை கட்டி எழுப்ப இன்றியமையாத தூண்களாக இருப்பதாகவும், எங்கள் சமூகம் ஒன்று கூடி வழிபடவும், தெய்வத்தின் முன்னிலையில் ஆறுதல் பெற ஒரு புனித இடத்தை உருவாக்க உதவும் என்றும், இது தமிழர்கள் மட்டுமல்லாது மலையாளம், தெலுங்கு மற்றும் பிற மொழி





மக்களுக்கும் வழங்கப்படும் “சமூகக் கோவிலாக” விளங்கும் என்றும் கூறினார்.

பூஜை விழாவைத் தொடர்ந்து இடம் பெற்ற நிகழ்ச்சிகளில் நடனமும், இசையும் தமிழரின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பிரதிபலித்தது. சிறு குழந்தைகளின் பஜனைப் பாடல்கள், முருகப்பெருமானைப் பற்றிய நடன நிகழ்ச்சி மற்றும் 6 புனித முருகன் சன்னதிகளை அடிப்படையாகக் கொண்ட காவடி நிகழ்ச்சி, நாட்டிய நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் சிறப்பித்தது.

இறுதியில் பிரசாத அன்னதானத்துடன் திறப்பு விழா இனிது நிறைவடைந்தது. இந்தப் பிரதேசத்தில் வாழும் சுமார் 600க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி, வரவிருக்கும் ஆலயத்தின் பங்களிப்பை ஒரு ஆன்மீக மையமாக மட்டுமல்லாமல், கலாச்சார பரிமாற்றம் மற்றும் கூட்டு வளர்ச்சிக்கான துடிப்பான அமைப்பாக எதிர்கால தலைமுறைகளுக்கு நினைவூட்டுகிறது.

உள்ளூர் இலங்கை, இந்திய தமிழ்ச் சமூகத்தினரும், வோட்டர்லூ பாராளுமன்ற உறுப்பினர், மற்றும் பிரமுகர்களும் ஸ்ரீ முருகன் இந்துக் கோவிலின் அங்குரார்ப்பன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

**தகவல்: அ. ஆதித்தன்**

# இலங்கை சுதந்திர தின நாளன்று கனடாவில் "கனடிய தமிழர் பேரவை" அலுவலகம் முன்பாக தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம்.

## கைகளில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகளுடன் “சிரிசி” யின் தற்போதைய நிர்வாகக் குழு ஒட்டுமொத்தமாக இராஜினாமாச் செய்ய வேண்டும் எனவும் ஆர்ப்பரிப்பு




**(ஸ்காபுறோவிலிருந்து சத்தியன்)**






இலங்கை சுதந்திரமடைந்த தினமான பெப்ரவரி 4ம் திகதி அன்று கனடாவில் கனடிய தமிழர் பேரவை அலுவலகம் முன்பாக கூடிய நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கனடிய தமிழர் பேரவையானது உலகத் தமிழர் பேரவையோடு இணைந்து இலங்கை அரசுக்கு சமர்ப்பித்துள்ள “இமாலய பிரகடனத்தை உடனடியாக வாபஸ் வாங்கவேண்டும்” என்றும் இதை மறுக்கும் பட்சத்தில் தற்போதைய நிர்வாகக் குழு முழுமையாக தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்து பதவி விலக வேண்டும் என்றும் அங்கு கூடிய தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அச்சமையம் அவர்களில் பலர் கைகளில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகளுடன் “சிரிசி” யின் தற்போதைய நிர்வாகக் குழு ஒட்டுமொத்தமாக இராஜினமாச் செய்வதையே கனடியத் தமிழர்கள் விரும்புகின்றார்கள் என்றும் கோசங்கள் எழுப்பினர்

இது பற்றி மேலும் அறியப்படுவதாவது: இலங்கையின் சுதந்திர தினத்தை இலங்கை அரசாங்கம் மாத்திரமன்றி ரொறன்ரோ நகரில் உள்ள இலங்கையின் உதவித் தூதுவர் அலுவலகமும் கொண்டாடி வருகின்றது. அன்றைய தினம் கனேடிய தமிழர் பேரவைக்கு முன்பாக கூடிய மக்கள் தமிழர்களுக்கு எதிரான இமாலய பிரகடனத்தை உருவாக்கி அதனை இலங்கை அரசிடம் சமர்ப்பித்த கனடியத் தமிழர் காங்கிரஸ் (CTC) அமைப்பின் அலுவலகத்திற்கு முன் தமிழர்களுக்கு ஒரு சிறு அமைப்பாக இருந்து இயங்கிக் கொண்டு ஒட்டுமொத்த தமிழினத்தின் பிரதிநிதியாக செயல்படுவதினையும் கண்டித்து “இமாலய பிரகடனம்” என்பது ஒரு தமிழர்களுக்கு எதிரான “பிரளயம்” என்றும் ஒலி எழுப்பினர். தமிழ் மக்களுக்கு எதிரான தீர்மானம் என்றும் தெரிந்தும் அதனை தொடர்ந்தும் அமுல்செய்வதில் கனடிய தமிழர் பேரவையின் தலைவி தீவிரமாக செயற்படுவை எதிர்த்து, ஒட்டுமொத்த நிர்வாக அமைப்பினர் ராஜினாமா செய்ய கோரியும் இனிமேலும் புத்த பிக்கு மற்றும் சிங்கள அரச கைக்கூலிகளிடம் கையேந்தி ஒட்டு மொத்த தமிழினத்தை விற்க வேண்டாம் எனவும் கோரி, கோஷம் எழுப்பினார்கள் தொடர்ந்து “இமால பிரகடனத்தை அமுல் செய்யும் விடயத்தில் புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து சென்ற விசமிகளின் படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளுக்கு முட்டைகளை வீசி எறிந்து தங்கள் எதிர்ப்பினை தெரிவித்தனர்”.

அதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான வாகனங்கள் ஒன்று சேர்ந்த “நீண்ட வாகனப் பேரணியாக” இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட இடத்திற்கு கோசங்கள் எழுப்பிய வண்ணம் சென்று அங்கு தங்கள் ஆட்சேபனையை தெரிவித்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# அன்பின் தொனி - 721

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

**மதியீனன்**

கோடைக்காலத்திலே உறைந்த பனியும், அறுப்புக்காலத்திலே மழையும் தகாததுபோல, மூடனுக்கு மகிமைதகாது. அடைக்கலான் குருவி அலைந்துபோவதுபோலவும், தகைவிலான் குருவி பறந்து போவதுபே-ாலவும், காரணம் இல்லாமல் சொன்னசாபம் தங்காது. குதிரைக்குச் சவுக்கும், கழுதைக்குக் கடிவாளமும், மூடனுடைய முதுகுக்குப் பிரம்பும் ஏற்றது. மூடனுக்கு அவனுடைய மதியீனத்தின்படி மறுஉத்திரவு கொடுக்காதே; கொடுத்தால் நீயும் அவனைப்போல ஆவாய். மூடனுக்கு அவனுடைய மதியீனத்தின்படி மறுஉத்திரவு கொடு; கொடுக்கா விட்டால் அவன் தன்னுடைய பார்வைக்கு ஞானியாக இருப்பான். மூடன் கையிலே செய்தி அனுப்புகிறவன் தன்னுடைய கால்களையே வெட்டிக்கொண்டு நஷ்டத்தை அடைகிறான். நொண்டியின் கால்கள் குந்திக்குந்தி நடக்கும், அப்படியே மூடர்களின் வாயிலுள்ள உவமைச் சொல்லும் குந்தும். மூடனுக்கு மரியாதை கொடுக்கிறவன் கவணிலே கல்லைக்கட்டுகிறவன் போல் இருப்பான். மூடன் வாயில் அகப்பட்ட பழமொழி வெறியன் கையில் அகப்பட்டமுள். பலத்தவன் அனைவரையும் நோகச்செய்து, மூடனையும் வேலைவாங்குகிறான், மீறி நடக்கிறவர்களையும் வேலைவாங்குகிறான். நாயானது தான் கக்கினதை சாப்பிடும்படித் திரும்பு வதுபோல, மூடனும் தன்னுடைய மூடத்தனத்திற்குத் திரும்புகிறான்.

**விறகில்லாமல் நெருப்பு அணையும் கோள்சொல்லுகிறவன் இல்லாமல் சண்டை அடங்கும்**

தன்னுடைய பார்வைக்கு ஞானியாக இருப்பவனைக் கண்டால், அவனைவிட மூடனைக்குறித்து அதிக நம்பிக்கையாக இருக்கலாம். வழியிலே சிங்கம் இருக்கும், நடுவீதியிலே சிங்கம் இருக்கும் என்று சோம்பேறி சொல்லுவான். கதவு கீல்முளையில் ஆடுகிறதுபோல, சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருக்கிறான். சோம்பேறி தன்னுடைய கையைக் கலத்திலே வைத்து அதைத் தன்னுடைய வாய்க்குத் திரும்ப எடுக்க வருத்தப்படுகிறான். புத்தியுள்ள மறு உத்திரவு சொல்லத்தகும் ஏழுபேரைவிட சோம்பேறி தன் பார்வைக்கு அதிக ஞானமுள்ளவன். வழியிலே போகும்போது தனக்கு சம்மந்தமில்லாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்து இழுக்கிறவனைப்போல இருக்கிறான். கொள்ளிகளையும் அம்புகளையும் சாவுக்கேதுவானவைகளையும் எறிகிற பைத்தியக்காரன் எப்படியிருக்கிறானோ, அப்படியே, தன்னோடு இருந்தவனை வஞ்சித்து: நான் விளையாட்டுக்கல்லவோ செய்தேன் என்று சொல்லுகிற மனிதனும் இருக்கிறான். விறகில்லாமல் நெருப்பு அணையும்; கோள்சொல்லுகிறவன் இல்லாமல் சண்டை அடங்கும். கரிகள் தழலுக்கும், விறகு நெருப்புக்கும் ஏதுவானதுபோல, கோபக்காரன் சண்டைகளை மூட்டுகிறதற்கு ஏதுவானவன். கோள்காரனுடைய வார்த்தை கள்விளையாட்டுப்போல இருக்கும்; ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் குத்தும். நேச அனலைக் காண்பிக்கிற உதடுகளோடு கூடிய தீயநெஞ்சம் வெள்ளிப்பூச்சு பூசிய ஓட்டைப்போல இருக்கும். பகைஞன் தன்னுடைய உள்ளத்தில் கபடத்தை மறைத்து, தன்னுடைய உதடுகளினால் சூதுபேசுகிறான். அவன் தாழ்மையாக பேசினாலும் அவனை நம்பாதே; அவனுடைய இருதயத்தில் ஏழு அருவருப்புகள் உண்டு. பகையை வஞ்சகமாக மறைத்து வைக்கிறவன் எவனோ, அவனுடைய பொல்லாங்கு மகா சபையிலே வெளிப்படுத்தப்படும். படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான்; கல்லைப் புரட்டுகிறவன்மேல் அந்தக்கல் திரும்ப விழும். பொய்நாவு தன்னால் பாதிக்கப்பட்டவர்களைப் பகைக்கும் முகஸ்துதி பேசும் வாய் அழிவை உண்டாக்கும். - **நீதிமொழிகள் 26: 1-28**

**தொடரும்...**

# முதல்வர் ஸ்டாலினின் 33 மாத ஆட்சியில் ரூ.8.65 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு; 30 லட்சம் வேலைவாய்ப்பு: தமிழக அரசு

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய 33 மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூபாய் 8.65 லட்சம் கோடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அதன் மூலம் ஏறத்தாழ 30 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மறைந்த முதல்வர் கருணாநிதி சென்னையில் வள்ளுவர் கோட்டம், தருமபுரியில் அதியமான் கோட்டம் எனத் தமிழ் வளர்க்கும் கோட்டங்களை அமைத்தார்கள்.

அதுபோல், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், 2021ல் பொறுப்பேற்றது முதல் இந்தியாவின் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புதிய முதலீடுகளை ஈர்த்துத் தமிழகத்தில் தொழிற்சாலைகளைப் புதிது புதிதாக அமைத்துத் தமிழகத்தை ஒரு தொழில் கோட்டமாக உருவாக்கிடும் முயற்சியில் ஓய்வின்றி உழைத்து வருகிறார்.2030ம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்துக்கு மிக முக்கியப் பங்களிக்கிற மாநிலமாகவும் தமிழகத்தை உயர்த்திடும் பெரும் லட்சிய இலக்கை நிர்ணயித்து முதல்வர் ஸ்டாலின் அரசு முனைப்புடன் செயல்படுகிறது.

அதன் முதற்கட்டமாக, முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலம் ரூ.1,90,803 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.இரண்டாம் கட்டமாக, ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு 17 ஆயிரத்து 371 பேருக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில், 7 ஆயிரத்து 441 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.மூன்றாம் கட்டமாக, 2024 ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு அரசு நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முன்எப்போதும் இல்லாத அளவாக, 6,64,180 கோடி ரூபாய் முதலீடுகளும், அவற்றின்மூலம் 14,54,712 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளும் 12,35,945 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் என மொத்தம் 26,90,657 வேலைவாய்ப்புகளுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.




நான்காம் கட்டமாக 2712024 அன்று புறப்பட்டு ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று அங்குள்ள பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைச் சந்தித்து தமிழ்நாட்டிலுள்ள தொழில் வாய்ப்புகளையும், அரசு வழங்கும் சலுகைகளையும், கிடைக்கும் திறன்வாய்ந்த மனித வளத்தையும் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட வருமாறு முதல்வர் அழைப்பு விடுத்தார். அவற்றின் பயனாக ரூ.3,440 கோடி ரூபாய் அளவுக்குத் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு குறித்தும், தமிழக அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான 'நியூயார்க் டைம்ஸ்' செய்தி வெளியிட்டு பாராட்டியது.'

ஆண்டுவாரி முதலீட்டாளர்கள் சந்திப்பு 2022 நடைபெற்றபோது ஆசியஓசியான மண்டலத்துக்கான சிறந்த முதலீட்டு நிறுவனத்துக்குரிய விருது தமிழக அரசின் வழிகாட்டி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.புதிய தொழில் முதலீட்டாளர்கள் ஒப்பந்தங்கள் செய்துள்ள நிலையில் தமிழகத்தைப் பெரிய அளவில் தொழில்மயமாக்க அடுத்த 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கர் பரப்பளவில் நில வங்கி உருவாக்கப்படுகிறது. இதற்காக, சிப்காட் நிறுவனம் ஏறத்தாழ 33,489 ஏக்கர் நிலம் தெரிவு செய்துள்ளது.

**இந்திய செய்திகள்**

இதில், 22,941 ஏக்கர் நிலம் அரசின் நிருவாக அனுமதி பெற்று கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், இதுவரை 44 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 27 தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின்மூலமாக 74 ஆயிரத்து 757 இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இப்படித் தொழில் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்படுவதுடன், ஒப்பந்தங்கள் தொழில் நிறுவனங்களாக உருப்பெறத் தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக முதல்வர் தொழில் துறை அமைச்சரின் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளார். இந்த குழுவின் தொடர் நடவடிக்கைகளின் மூலம் பல தொழிற்சாலைகள் தமிழகத்தில் அடுத்தடுத்து உருவாகும் வாய்ப்பு உள்ளது.தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய 33 மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூபாய் 8.65 லட்சம் கோடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அதன் மூலம் ஏறத்தாழ 30 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இது தமிழக முதல்வருடைய ஆட்சிக்காலம் ஒரு மாபெரும் தொழிற் புரட்சிக்கான அடித்தளம் என்பதை வெளிப்படுத்துகிறது" என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. முன்னதாக, "திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 32 மாதங்களில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தது குறித்து முழுமையான வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். மேலும், "2030க்குள் 1 டிரில்லியன் டாலர் முதலீட்டினைக் கொண்டு வருவேன் என்று கூறியதற்கு இதுநாள்வரை வரைவு அறிக்கை எதுவும் வெளியிடாதது ஏன்?" என்றும் அவர் வினவியிருந்தார்.

# அறநிலையத்துறை சார்பில் தமிழகத்தில் 7 கோயில்களில் மகாசிவராத்திரி விழா: மார்ச் 8ம் தேதி நடைபெறுகிறது




இந்து அறநிலையத்துறை சார்பில் தமிழகத்தில் 7 கோயில்களில் மகாசிவராத்திரி விழா மார்ச் 8ம் தேதிவெகுவிமரிசையாக நடைபெறுகிறது. இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஆணையர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்துக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை தாங்கினார். கூட்டத்தில் 1,000 ஆண்டுகள் பழமையான கோயில்களை புனரமைக்கும் வகையில் ரூ.304.84கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் 197 கோயில்களின் திருப்பணிகளில், 16 கோயில்களில் பணிகள் முடிவுற்றுள்ளன.இந்நிலையில், இதர தொன்மையான கோயில்களில் நடைபெற்றுவரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணத்தை 200 பக்தர்களுடன் பழனி தண்டாயுதபாணி சுவாமிகோயிலிலிருந்து தொடங்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

அதேபோல், மகா சிவராத்திரி விழா மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், பேரூர் பட்டீஸ்வரர் கோயில்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்: இந்தாண்டு கூடுதலாக, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் மற்றும் திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் கோயில் ஆகிய 2கோயில்களையும் சேர்த்து 7கோயில்களில் வருகின்ற மார்ச்8ம் தேதி மகா சிவராத்திரி பெருவிழாவை ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாக கொண்டாட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் அகதிகளாக தனுஷ்கோடி வருகை

இலங்கையிலிருந்து தனுஷ்கோடிக்கு அகதிகளாக வந்த, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டனர். இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக தனுஷ்கோடிக்கு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வருகின்றனர். இவர்களை கைது செய்யாமல், மனிதாபிமான அடிப்படையில் மண்டபம் முகாமில் தற்காலிகமாக தமிழக அரசு தங்கவைத்துள்ளது.

மேலும்,இலங்கைத் தமிழர்களின் பதிவுகுறித்து மத்திய அரசின் முடிவுக்காக தமிழக அரசு காத்திருக்கிறது.மறுவாழ்வு முகாமில்... இந்நிலையில், இலங்கை வவுனியா



மாவட்டம் நெடுங்கேணியைச் சேர்ந்த நந்தகுமார்(42), அவரது மனைவி சங்கரி என்ற நித்யா(26), மகள்கள் ஜெசிகா(6), ஜெனுசிகா(3), ஜெபிசிகா(2) ஆகிய 5 பேரும் இலங்கையில் உள்ள தலைமன்னார் தாழ்வுப்பாடு கடற்கரையிலிருந்து ஃபைபர் படகில் புறப்பட்டு, தனுஷ்கோடி அரிச்சல்முனை அருகேயுள்ள மணல் தீடை பகுதியில் வந்து இறங்கினர்.தகவலறிந்த மெரைன் போலீஸார் அங்கு சென்று, இலங்கை தமிழர்கள் 5 பேரையும் மண்டபம்காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணைக்குப் பின்னர் 5 பேரும் மண்டபத்தில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். இலங்கையிலிருந்து இதுவரை தமிழகத்துக்கு வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 294ஆகஉயர்ந்துள்ளது.

மொன்றியல் நகரில் உதயன்

விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.

FRUITS HABY

பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்

5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519


Keith Sanmugathas
Broker
PROPERTY MAX
Higher Achievements
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
Sun Sanmugathas
Broker of Record

416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்



Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!



- Loans
- Cash
- Debt Consolidation
- 1st & 2nd Mortgage
- Home Renovation Loan
- Equity Loans

No Credit Check
Next Day Approval
Quick & Easy

உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350



உதயம் 1453 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 9, 2024




# “கண்ணகி நீதி கேட்ட தமிழ் மண்ணிலிருந்து இலங்கைத் தமிழருக்காக நீதி கேட்கிறேன்!”

## தமிழ்நாட்டில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் கனடா ஒன்றாரியோ பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி முழக்கம்!

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் நடைபெற்ற ”அயலகத் தமிழர் மாநாட்டில் கனடாவின் பிரதிநிதியாக ஒன்றாரியோ பாராளுமன்ற உறுப்பினர் திரு. லோகன் கணபதி கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். இலங்கையில் நடைபெற்ற இனமழிப்புப் படுகொலைகளுக்கு உரிய நீதி கிடைக்க உலகத் தமிழர்கள் ஒருங்கிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று அவர் அப்பொழுது கேட்டுக் கொண்டார்.

(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)

# மாணவர்கள்மீதான தாக்குதல்கள் இலங்கை அரசின் கோரமுகத்தை அம்பலப்படுத்துகின்றது

## நாடு கடந்த தமிழீழ அரசின் கனடா உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி கண்டனம்



பெப்ரவரி 4, 2024 இலங்கையிதன் சுதந்திரதினத்தன்று கிளிநொச்சியில் அறவழியில் போராடிய மாணவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள்மீது இலங்கை அரசின் காவல்துறை மேற்கொண்ட அராஜகமான தாக்குதல் இலங்கை அரசின் கோரமுகத்தை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது. என கனடாவிலிருந்து நாடு கடந்த அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர் நிமால் விநாயகமூர்த்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திரதினத்தை புறக்கணிக்கும் விதமாகவும் அந் நாளை கரிநாளாக பிரகடனப்படுத்தியும் அமைதி வழியில் பேரணி சென்ற அரசியல் தலைவர்கள், மாணவர்கள், மக்கள்மீது மிகவும் கொடூரமான முறையில் இலங்கை காவல்துறையினர் தாக்குதல் நடத்தியுள்ளமை கண்டு புலம்பெயர் தேசமாக கடும் கண்டங்களை வெளியிடுகின்றோம்.

(உள்ளே விபரமான செய்தி 21ம் பக்கத்தில்)




# இந்தியாவில் "நாடு கடத்த தமிழீழ அரசாங்க" மாநாட்டுக்கு தமிழக அரசு விதித்த தடையை சென்னனை உயர்நீதிமன்றம் நிராகரித்தது

## உயர்நீதிமன்ற தீர்ப்புக்கமைய பெப்ரவரி 9ம் திகதி வெள்ளிக்கிழமை, மாநாட்டை சென்னையில் நடத்த ஏற்பாடு

இதன்பின்னர் நாடுகடந்த அரசாங்கப் பிரதமருடன் தமிழ நாட்டின் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை உறுப்பினர்கள், ஏனைய அரசவை உறுப்பினர்கள் கலந்தாலோசித்து இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவதென முடி வெடுக்கப்பட்டு நாடுகடந்த அரசாங்கத்தின் தமிழக அரசவை உறுப்பினர் மதிப்புக்குரிய பாவேந்தன் வழக்கறிஞர் அவர்களால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது .

மேற்படி வழக்கில் அரசுதரப்பு வழக்கறிஞ்ரின் அனைத்து வாதங்களையும் நீதிபதி நிராகரித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மாநாட்டை நடாத்த அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உள்ளே செய்தி 2ம் பக்கத்தில்)

# கனடிய வோட்டர்லூ வட்டாரத்தில் ஸ்ரீ முருகன் இந்துக் கோவில் திறப்பு விழா



வோட்டர்லூ வட்டாரத்தில் ஸ்ரீ முருகன் இந்துக் கோயில் திறப்பு விழா நனவாகியது. கடந்த ஜனவரி 26, 2024 வெள்ளிக்கிழமை தைப்பூச திருநாளில் கிச்சனரில் உள்ள “டீன் சமூக மையத்தில்” நடைபெற்ற இந்துக் கோவில் அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

அனைத்து தமிழ் பக்தர்களையும் ஒன்றிணைக்கும் எண்ணம் 2002 ஆம் ஆண்டில் வோட்டர்லூ மக்கள் மனதில் உருவானது. அதைத் தொடர்ந்து சிறிய அளவிலான இந்து திருவிழாக்கள் மற்றும் மாதாந்த பஜனைகள், விளக்கு பூஜை, திருப்புகழ் போன்றவை இந்தப் பகுதியில் வாழும் மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயக்குமார் குருக்கள் அவர்களின் தலைமையிலான சிவாச்சாரிகளின் மந்திரங்கள் ஒலிக்க பூஜை ஆராதனைகளுடன் கணபதி சிலை மற்றும் முருகனின் வேல் திறந்து வைக்கப்பட்டது.

(உள்ளே செய்தி 22ம் பக்கத்தில்)

# சுமந்திரன் ஒரு குழப்பக்காரர் , தமிழ் அரசியலில் அவரது இருப்பு இல்லாதொழிக்கப்பட வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்கள் அமைப்பின் பேச்சாளர் ராஜ்குமார் அறிக்கை



வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்களின் போராட்டம், 06.05. 2024 அன்றுடன், 2543 வது நாளை எட்டியது.

“சுமந்திரன் ஒரு குழப்பக்காரர், தமிழ் அரசியலில் அவரது இருப்பு இல்லாதொழிக்கப்பட வேண்டும்.” என்று தலைப்பிட்டு, காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்கள் சார்பில், அந்த அமைப்பின் பேச்சாளர் திரு ராஜ்குமார் அவர்களினால் ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

(உள்ளே செய்தி 12ம் பக்கத்தில்)

# சிறீதரன் தமிழரசுக் கட்சியை உடைப்பாரா? ஒட்டுவாரா? – யாழ்ப்பாணத்திலிருந்து "நிலாந்தன்"



சுமந்திரன் அணி தொடர்ந்தும் பலமாக இருப்பதைத்தான் தமிழரசு கட்சிக்குள் நடந்து வரும் இழுபறிகள் காட்டுகின்றன. சுமந்திரன் அணி எனப்படுவது ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல. அது ஏற்கனவே தமிழ் அரசியலில் இருந்தது. அது சுமந்திரனிலிருந்து தொடங்கவில்லை. அது ஏற்கனவே தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்தில் உண்டு. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய ஒரு கட்சி மாவட்ட அபிவிருத்தி சபைகளை நோக்கிச் சறுக்கிய கேவலமான ஒரு கடந்த காலம் உண்டு.தமிழ் மக்களுக்கு மறதி அதிகம். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய ஒரு கட்சி, பின்னர் மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுக்கொள்ளும் ஒரு நிலைக்கு தாழ்ந்து போனது. அப்படி என்றால் வட்டுக்கோட்டை தீர்மானத்தை அவர்கள் விசுவாசமாக நிறைவேற்றவில்லை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் அரசியலை முழுக்க முழுக்க எதிர்ப்பு அரசியல் திசையில் செலுத்திய ஒரு கட்சிக்கு அதை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. (உள்ளே செய்தி 10ம் பக்கத்தில்)